# குருநகர் ஜோசேவ்வாஸ் இளைஞர் மன்றம்

## 10வது ஆண்டு நிறைவு

# சிறப்பு மலர்



"இணைந்த உறவில் சமூக உயர்வு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொயலாஸ்

# Loyalas

59, Patricks Road,
Jaffna.
0777-734 083
021-222 3352
021-222 2110




எங்கள் சேவை உங்கள் தேவைக்கே...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருநகர் ஜேசேவ்வாஸ் இளைஞர் மன்றம்

## 10 வது ஆண்டு நினைவுச் சிறப்புமலர்

## 1996 – 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதுகாலவரை வேண்டி...**

இலங்கைத் தாய்த்திருநாட்டில் பணிவாழ்வை மேற்கொண்டு முத்திப்பேறுபெற்ற புனித யோசேவ்வாஸ் முனிந்திரரே அலைகள் மோதும் குருநகர் பதியில் யாகப்பர் ஆலய இளைஞரின் பாதுகாவலரே சவால்கள் நிறைந்த சூழலில் உம் பணிவாழ்வை எம் பணிவாழ்விலும் மேற்கொண்டு சமூகம் மேம்பட உழைக்கும் இளைஞர்கள் எம்மை கண்கொண்டு பாரும். உமது அருளின் துணையுடன் நாம் காலமெல்லாம் பணிவாழ்விலும் அன்புறவிலும், ஆன்மீகத்திலும் ஊன்றித் தழைக்கவும் என்றும் உம்பணி சிறக்கவும் எம்மை தூய ஆவியின் துணையினால் திடப்படுத்தி ஆசீர்வதித்தருளும்.

ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆயரின் ஆசிகள்...

குருநகர் ஜோசேவ்வாஸ் இளைஞர் மன்றத்தினரின் 10ஆவது ஆண்டு நிறைவில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

1994ஆம் ஆண்டு நேசநாயகம் அடிகளார் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் ஜெயச்சந்திரன் அமதி அடிகளாரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இவ் இளைஞர் மன்றம் 10 ஆண்டுகளை நிறைவு செய்கின்ற வேளையில் தமது கடந்த காலப் பணிகளை ஆய்வு செய்து இனிவரும் காலத்திற்கு திட்டமிடுவது மிகவும் பொருத்தமானது.

போராட்ட காலத்தில் இளைஞர் மன்றங்கள் இயங்குவதில் உள்ள பல்வேறு சிக்கல்கள் மத்தியில் உறுதியாக இவர்கள் செயற்பட்டு சமுகத்திற்கு பல்வேறு பணிகளை ஆற்றிவந்திருப்பது பாராட்டுவதற்குரியது. 45 இளைஞர்கள் அங்கத்தவர்களாக இந்த ஜோசேவாஸ் இளைஞர் மன்றத்தில் பணியாற்றுவது மற்றெல்லா மன்றங்களிற்கும் முன் உதாரணமாக திகழ்கிறது குருநகர்ப் பங்கைப் பொறுத்தவரை இன்னும் அனேகமானவர்கள் இந்த மன்றத்தில் இணைந்து பணியாற்ற வேண்டும் என பெரிதும் விரும்புகிறோம்.

இவர்களின் பணி மென்மேலும் சிறக்கவும் , குருநகர் பங்கு வளரவும் நல்லாசிகளைத் தெரிவித்து நிற்கிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பங்குத்தந்தையின் ஆசிகள்...

குருநகர் யோசேவ்வாஸ் இளைஞர் மன்றம் 10 ஆவது ஆண்டை நிறைவு செய்வதையிட்டு பங்குத்தந்தையாகிய நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியுமடைகிறேன்.

1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் மன்றம் பின்னர் 1996ஆம் ஆண்டளவில் யோசேவ்வாஸ் இளைஞர் மன்றம் என்னும் பெயருடன் உருவாக்கப்பட்டு பல்வேறு பங்குத்தந்தையர்களால் வழிநடத்தப்பட்டு பல சவால்கள் மத்தியிலும் வீறுநடைபோடுகிறது என்பது உண்மையிலே பாராட்டுக்குரியது.

இளைஞர் சக்தி அபாரசக்தி என்பதை நாம் யாவரும் அறிவோம் அவர்களின் ஆற்றல் திறமைகளை வெளிக்கொணர வழிவகைகள் செய்யவேண்டும் கடந்தகாலம் இளைஞர் மன்றம், பங்குப் பணிகளிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு உழைத்தனர். அறிவியல் போட்டிகள் வழியாக மாணவர்களின் நலனில் அக்கறை காட்டினர். கலையில் ஆர்வம் காட்டினர்.

முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் எவ்வாறு இலங்கையில் துணிவோடும் வாஞ்சையோடும் ஆன்மீகப் பணியாற்றி பல உள்ளங்களை இறைவன் பால் திருப்பினாரோ அவ்வாறே அவரது பெயரைத் தாங்கிய மன்றத்து இளைஞர்களும் தங்கள் ஆற்றல்கள் திறமைகளை வளர்த்து திருச்சபைக்கும் சமூகத்திற்கும் நற்பணியாற்றி இன்னும் பலரை நல்லமனிதர்களாக்க உழைப்பார்களாக. அவர்களின் முயற்சிகளும் திட்டங்களும் சிறக்க வாழ்த்தி மேலும் பல்லாண்டுகள் வளர வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

**அருள்திரு ஆர். எச். சகாயநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## உதவி பங்குத்தந்தையின் ஆசிகள்...

குருநகர் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் இளைஞர் மன்றத்தின் 10வது அண்டு நிறைவை முன்னிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இம் மன்றத்தின் ஆரம்பம் மிகவேகமான தூர நோக்கான செயற்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது நாட்டின் சீரற்ற நிலை புறச்சூழல்களின் தாக்கங்கள் தடைகளினால் இம்மன்றத்தின் செயற்பாடுகள் சில ஆண்டுகளாக தளர்ந்துபோய் இருந்தாலும் மீண்டும் இம்மன்றம் எழுச்சி கொண்டுள்ளதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

பல புதிய இளைஞர்களை தன்னகத்தே இழுத்துள்ள இம்மன்றம் குருநகர் சமூகத்தின் புதிய பலமாக பொங்கிவந்துள்ளதோடு பல சமூகப் பணிகளுக்காக தங்களை தயார் செய்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

அவர்களுடைய இந்த புதிய பலம் எமது சமூகத்தின் கல்வி விளையாட்டு கலை போன்ற உன்னத துறைகளினோடு கைகோர்த்து செயற்பட்டு புதிய சமூகத்தின் துரித வெற்றிக்கு இவர்களை அழைத்து தோள்தட்டி உற்சாகமூட்டி வாழ்த்துகின்றேன்.

**அருள்திரு எம். எல். தயாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆரம்ப இயக்குநரின் ஆசிகள்...

புனித யாகப்பர் ஆலய இளைஞர்மன்றம் தனது 10வது வருட நிறைவை அடைவதில் நான் பெருமகிழ்சசியடைகின்றேன். இதன் ஆரம்பநாட்களை எண்ணிப்பார்க்கின்றேன் வீதியோரங்களிலும் கடற்கரையோரங்களிலும் பொழுதைப்போக்கிக்கொண்டிருந்த இளைஞர்களைச் சந்தித்து ஒருநிலைப்படுத்தி ஆலயத்திற்கு கொண்டுவந்த இளைஞர்களை நான் நினைத்துப்பார்க்கின்றேன். இப்படியான பல துன்பங்கள் எதிர்ப்புக்கள் மத்தியில் தளைத்து வளர்ந்த இளைஞர் மன்றம் இன்று தனது 10வது ஆண்டு பூர்த்தியை பெருமிதத்துடன் கொண்டாடுவதை நினைத்து உண்மையில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தற்கால சூழலில் உலகம் ஓர் அமைதியற்ற நிலையில் தத்தளித்துக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக எமது நாட்டில் மனிதநேயம் அன்பு பாசம் மறுக்கப்பட்டு வருகின்றவேளையில் கிறிஸ்தவவிழுமியங்களை உங்கள் வாழ்வின் அடிப்படைக் கோட்பாடாகக்கொண்டு இளைஞர் சமுதாயத்திற்கு முன்மாதிரியான வாழ்க்கை வாழ இறைதுணை வேண்டி ஆசிக்கின்றேன்.

**அருள்திரு ஜெயச்சந்திரன்**
*(வடகொரியா)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## முன்னாள் தலைவரின் ஆசிகள்...

இற்றைக்கு பத்துவருடங்களின் முன்பு அருட்தந்தைகளான மதிப்பிற்குரிய ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன் ஆகியோரால் எமது சமூக இளைஞர்களை ஒருங்கிணைத்து சிறு விதையாக ஆரம்பித்த எமது மன்றம் இன்று பெரும் விருட்சிமாக வளர்ந்தது மட்டுமன்றி பலஅங்கத்தவர்களையும் தன்னகத்தே கொண்ட அமைப்பாக உருவாகி பத்து வருடங்கள் கடந்து நிற்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் எம் மன்றம் இளையோருக்கும் ஆலயத்திற்கும், சமூகத்திற்கும், ஊருக்கும் ஆற்றிய சேவைக்காக நன்றி கூறிநிற்கிறேன் இவ்வமைப்பு பல ஆண்டுகள் மட்டுமல்ல, பல யுகங்கள் கடந்து நிலைத்து தொடர்ந்து சேவையாற்றவேண்டும் என இறைவனை வேண்டும் இவ்வேளையில் மன்றத்தை வளர்த்த பங்குத்தந்தைகள், நிர்வாக உறுப்பினர்கள் பழைய அங்கத்தவர்கள் மற்றும் தற்போதைய பங்குத்தந்தை அங்கத்தவர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துகளும், பாராட்டும், நன்றிகளும் உரிதாகுக.

**அ. யூஜின்ராஜ்**
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தலைவரிடமிருந்து...

எமது குருநகர் யோசவ்வாஸ் இளைஞர் மன்றத்தின் 10வது ஆண்டு நிறைவை ஒட்டி எமது மன்றத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் வெளிவரும் மலரை உங்கள் கைகளில் தவழவிடுவதை இட்டு மன மகிழ்ச்சி அடைகின்றேன்.

சமுதாயத்தின் உயர்ச்சி அதன் முதுகெலும்பாகத் திகழும் இளைஞர் கைகளில்தான் என்பதை உணர்ந்து செயற்பட உருவாக்கப்பட இளைஞர் மன்றம் தனது கடின உழைப்பால் ஆன்மீகப் பணிகளிலும், சமூகப்பணிகளிலும் முனைப்புடன் செயற்பட்டுச் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை செய்து வந்துள்ளபோதிலும் நாட்டின் யுத்தசூழல் இடப்பெயர்வு காரணமாக சிறிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.

இருப்பினும் மீண்டும் உத்வேகத்துடனும், புரிந்துணர்வுடனும் புதுயுகம் படைக்க புறப்படும் எமது இளைஞர்களின் முயற்சிகள் வெற்றி பெறவும், அவர்களின் கடின உழைப்பால் வெளிவரும் இவ் இதழ் சிறப்புற உழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகளைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மேலும் எம்மைத் தொடர்ந்து வரும் மன்ற உறுப்பினர்களும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளால் எமது மன்றத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் செயற்படவேண்டும் என ஆசித்து நிற்கின்றேன்.

**ம. சுதர்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலர்ந்தவிதம்...

குருநகர் யோசேவ்வாஸ்
இளைஞராகிய எமது கையில்
இந்த மலர் விரிகின்றது
எம் இளைஞர்களின்
ஆளுமை மட்டுமல்ல
செயல்திறனை
வெளிப்டுத்தும் முயற்சியே
இம்மலரின் வடிவத்தில்
உங்கள் முன்னால்

இது வெறும் காகிதங்களாலான மலரல்ல
நறுமணம் வீசக்கூடியது
அந்த நறுமணத்திற்கு
சொந்தக்காரர்கள் எமது மன்றத்து
ஒவ்வொரு இளைஞர்களுமே

இம்மலர் துல்லியமான
எழிற்சியோடு கட்டுக்கோப்போடு
சிலிர்த்து நிற்கிறதென்றால்
உற்றுப் பாருங்கள் அதில் எம்மை
வரம்பு பிசகாமல் வழிநடத்திய
குருக்கள் மூத்த உறுப்பினர்கள்
சாயல் தொரியும்

இந்த சித்திரப் பூவின்
சிாப்பொலிக்குள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள் நாணயங்களை தயங்காமல்
அள்ளித் தெளித்த
வள்ளல் உள்ளங்களின்
வியர்வை துளிகள்
விழும் ஓசையும்
கலந்திருக்கின்றன
அந்த நல்லிதயங்களுக்கு எம்
இளைஞர் மன்றமே நன்றியாகட்டும்

ஆற்றுக்குள்ளும் சேற்றுக்குள்ளும்
புத்தி மூச்சை உள்ளடக்கி
தூங்காமல் விழித்திருந்து சேர்த்த
மகரந்த எழுத்துக்கள்
இந்த மலரின்
இதழ்கள் தோறும்
வீசிக்கிடக்கின்றன

நாம் இந்தக் காற்றை ஊதிவிட்டவர்கள் தான்
அதற்காக உயில்
எழுதிக்கொள்ள முடியாது

இந்த மலாரில்
என் விரலின்
நொடிப்பொழுது ஸ்பரிசத்தில்
என் எமது
வாசத்தில் நிறைந்தது.

இதழாசிரியர்
**கெ. யோகேஸ்வரன்**

## அட்டைப்பட விளக்கம்

குருநகர் ஜோசேவ்வாஸ் இளைஞர் மன்றமானது இன்று தனது பத்தாவது ஆண்டு நிறைவை எட்டியுள்ளது இதன் பலாபலன்களாக எமது மன்றமானது சமூகத்திற்கும் ஆலயத்திற்கும் அழப்பரிய சேவைகளை ஆற்றிவந்துள்ளது. இவற்றின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்ட மலர்தான் பத்தாவது ஆண்டு நிறைவுச்சிறப்பு மலர். அதன் அட்டையில் காட்டி நிற்கும் படவிளக்கமும் இதைத்தான் கூறுகின்றது.
அதாவது
இளைஞர்கள் தமது இதயத்தின் அடி ஆளத்திலிருந்து தமது ஊக்கத்தையும் செயற்பாட்டையும் சுட்டெரித்துக் கொண்டு சமூகப்பணியை மேற்கொள்வதற்காக புறப்பட்டு காலம் என்னும் சக்கரத்தின் ஊடாக அதன் சுழற்சிவேகத்திலேயே தமது பணியையும் வேகமாகவும் துல்லியமாகவும் மேற்கொண்டு ஒரு எல்லையற்ற பணிவாழ்வின் ஊடாக வெற்றிப்பாதையை நோக்கி நகர்கின்றனர்.


நூல் வெளியீட்டுப் பிரிவுக் குழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம் மன்றம் கடந்துவந்த பாதைகள்...

பொங்குதமிழ் ஈழமண்ணின் தங்குபுகழ் ஓங்கியதாய்
பொங்கொலி நகரிதன் கரைதனை அண்டியே
வங்கிசத்தோன் சந்தியோகு ஆலயமாம்
எங்கள் பதி வீற்றிருக்கும் காட்சிபாரீர்

பொங்கு அலை வீரரிவர் கூடிநின்று
இங்கிதமாய் சேவைகளை செய்து நின்றார்
தம்மனமும் பிறர்மனமும் மகிழ்ந்திட்வே
புத்தாண்டு விழாவென்று கூடிக்களி

1993ஆம் ஆண்டு எமது ஆயலத்தில் அனர்த்த நிகழ்வு நடைபெற்றது என்பது உலகறிந்த உண்மை அனர்தத்தின் மீட்புப்பணியில் எம் இளைஞர்களின் பங்களிப்பு சொல்லிலடங்கா இதைப் பார்த்தறிந்த அன்றைய பங்குக்குருவாயிருந்த அருட்தந்தை R.M.G நேசநாயகம் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது இந்த காட்டாற்று வெள்ளங்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பது அவரின் முயற்சியின் பயன்தான் 1994ஆம் ஆண்டு அலயத் திருவிழாவின் கொடியேற்றத்தை தொடர்ந்து நமது இளைஞர் மன்றம் உருவாக்கப்பட்டது இம்மன்ற உருவாக்கத்தை ஒரு கதை என்று கூட கூறலாம்.

நான் சிறுவயது முதல் எனது ஊரிலுள்ள புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழுவில் இருந்து வந்தேன் அவ்அமைப்பின் 30வது அண்டு நிறைவு விழாவை கொண்டாடும் முகமாக பல செயற்திட்டங்கள் செய்திருந்தோம் அதிலொன்று சாரணர்களுக்கான பயிற்சிப்பாசறை நடாத்துதல் அதன் இறுதிநாள் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக எமது ஆலயத்தின் பங்குக்குருவை அழைப்பதாக எண்ணியிருந்தோம் அதன்பிரகாரம் அன்றைய சாரணிய இயக்க நிர்வாகத்துடன் நானும் இணைந்து குருமனையில் சந்திக்க சென்றிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கு பங்குக் குருவானவர் ஆலயப் புனரமைப்பு நிதிக்காக வெளிநாடு சென்றிருந்ததால் உதவி பங்குக்குருவை சந்தித்து நாம் வந்த விடயத்தையும்கூற அழைப்பையும் கூறினோம் மறுப்பின்றி அழைப்பை ஏற்றார் இருப்பினும் நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும் செய்வதாக ஒப்புக் கொண்டால் நான் உங்கள் அழைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் எனக் கூறினார் அச்சமயம் வேறுவழியின்றி அவரின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்துக்கொண்டோம்.

அவர் விடுத்த வேண்டுகோள் எம் இளைஞர் மன்றத்தின் உருவாக்கம் எமது இளைஞர்களின் வேகம், விவேகம், ஆற்றல், செயல்திறன் என்பவற்றை எம் பங்குக்குரு கூறியதாகவும் தானே நேரில் கண்டதாகவும் எம்பெருமைகளைக் கூறி எமது சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டார்.

என் மனதிலும் இந்த விடயம் இரண்டு மூன்று வருடங்களாக அருட்டிக்கொண்டிருந்தது உண்மை எனவே அருட்தந்தையின் உற்சாகத்தோடு ஊரிலொரு இளைஞர் மன்றத்தை உருவாக்கவேண்டுமென எண்ணினேன் அதற்கு செயல் வடிவமும் கொடுக்கப்பட்டது.

அருட்தந்தை ஜெயசந்திரனின் விடாமுயற்சியாலும் அயராத உழைப்பாலும் 1994 ஆம் ஆண்டு எமது ஆலயத்திருவிழாவின் கொடியேற்றத்துடன் எமது முதல் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது அக்கூட்டத்திற்கு மன்ற ஆலோசகர் என அறிமுகம் செய்யப்பட்ட டிலாசால் சபையைச் சார்ந்த காந்தனும் வந்திருந்தார் இவர்களுடைய தலைமையிலேயே நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது அன்றிலிருந்து இன்றுவரை எம் மன்றத்தின் வளர்ச்சி சொல்லிலடங்கா.

## முதல் செயற்பாடும் வெளிப்பாடும்

புதிதாக உருவாக்கப்பட்ட எம் மன்றத்தை அறிமுகப்படுத்துவதுடன் மேலும் பல இளைஞர்களை இணைப்பதற்காகவும் ஒரு செயற்பாடு முன்னெடுக்கப்படவேண்டுமென கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது அதன் பிரசாரம் ஒரு ஒலிநாடா வெளியிடுவதென கூறி துரிதகதியில் செயல்பட்டு ஐந்து நாட்களுக்குள் ஒரு ஒலிநாடாவை தயார்படுத்தினோம் அதற்குரிய பாடல்களை எம் மன்ற அங்கத்தவர்களும் ஊரிலுள்ள ஒரு சிலரும் தந்துதவினர் அவ்ஒலிநாடாவை சிதைவின் கானங்கள் என்ற பெயருடன் 1994.07.24 ஆம் திகதி திருவிழாவிற்கு முதல் நாள் திருப்பலி முடிவில் அதனை வெளியீடும் செய்தோம் அதற்கு பெருமனத்துடன் பண உதவி வழங்கியவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள்.

## முதற் சமூகசேவை

குருநகர் றெக்ளமேசன் பகுதிகளில் மக்களின் வசதி கருதி ஆங்காங்கு கேணிகள் அமைக்கப்பட்டிருந்தது அறிந்ததே காலப்போக்கில் அதனை பராமரிக்காமல் விடவே அவை பாழடைந்து தூர்ந்து போகும் நிலை ஏற்பட அதனை இனம் கண்டு புனரமைப்பு வேலைகளை எமது மன்றம் மேற்கொண்டது இதற்கு அன்று எமது ஆலயத்தில் உதவி பங்குக் குருவாயிருந்த அருட்திரு ரவிச்சந்திரன் பக்கபலமாய் இருந்து எம்மை வழிநடாத்தினார். அத்துடன் இச் செயற்பாட்டை வெளிப்படுத்தி மேலும் இம் மன்றம் சிறப்புடன் மிளிரச் செய்தார்.

இச் செயற்பாட்டின் பயனாய் மேலும் பல இளைஞர்கள் வந்து கூடினர் இக்காலப் பகுதியில் எமது பங்கில் "புதுப்புனல்" என்ற தலைப்பில் கத்தோலிக்க சமய விழிப்புணர்வு மகாநாடு நடைபெற்றது அச்சமயம் ஊரின் கடை எல்லை வரை பங்கில் உள்ள பக்திச் சபைகள் பல குழுக்களாக பிரிந்து சென்று வழிபாடுகள் நடாத்தினர் அதிலும் எங்கள் பங்களிப்பு கணிசமான அளவு காணப்பட்டது.

## முதற் கலை நிகழ்வு

மன்றத்தின் நிதி வளர்ச்சிக்காக எம்மால் கலை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு நுழைவுச் சீட்டுகள் அச்சிடப்பட்டு வீடுவீடாகச் சென்று விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. கலை நிகழ்ச்சிகள் எமது மன்ற அங்கத்தவர்களாலேயே நிகழ்த்தப்பட்டது எமது அங்கத்தவர்கள் இணைந்து "கல்வி ஏழைகள்" என்ற நவீன நாடகமும் வேறுசில கலைநிகழ்வுகளையும் மேடை ஏற்றினர் இதற்கு ஆரம்பத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தது எமது வளர்ச்சியின் ஒரு படியாகும் ஆனால் அந் நிகழ்வுகள் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

அடுத்த கட்டமாக எமது பங்கில் நடைபெற்ற புதுப்புனல் மகாநாட்டின் இறுதிநாள் விழாவில் எம் மன்ற அங்கத்தவர்களும் மகளிர் மன்ற அங்கத்தவர்களும் இணைந்து பல கலை நிகழ்வுகளை மேடை ஏற்றியதுடன் எம் மன்ற கலைஞர்களின் கைவண்ணத்திற் உருவாகிய கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய இசை நிகழ்ச்சியும் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## மன்றத்தின் பெயர் மாற்றம்

95களில் யுத்தத்தின் கெடுபிடியால் எம் இளைஞர்கள் பெரும் அவதிக்குள்ளாயினர் இதனால் அவர்கள் அச்சமுற்று ஆலயத்தை நாடினர் அன்றிருந்து நிலையில் எமது மன்றம் ஊரின் பொதுச் சொத்தாக கருதப்பட இடமிருந்தது காரணம் "குருநகர் இளைஞர் மன்றம்" என்ற பெயருடனே இயங்கி வந்தது காலத்தின் தேவை கருதியும் இளைஞர்களின் ஆன்மீக தேவை கருதியும் மன்றத்தின் பெயரை மாற்ற வேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டது அதன் பயனாய் அவ் ஆண்டு முத்திப்பேறுபெற்ற பட்டம் வழங்கப்பட்ட யோசவாஸ் முனீந்திரனின் பெயரை எமது மன்றத்திற்கு சூட்டுவதாக முடிவெடுத்தோம் அருட்தந்தை ரவிச்சந்திரன் இப் பெயரை முன்மொழிய ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்பெயர் மன்றத்திற்கு இடப்பட்டது.

## போர்க்கால முதலுதவிச் சேவை

எமது செயற்பாட்டின் ஆரம்பகாலத்தில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்கள் எம் ஊரில் பல கட்டிடங்கள் உயிர்கள் என்பன இழப்பிற்கு உள்ளாகியது காயமடைந்தவர்களிற்கு உடனடி முதலிதவி வழங்கப்பட முடியாமலும் பல உயிரிழப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது இவற்றை உணர்ந்த நாம் உடனடியாக முதலுதவி வகுப்புக்களை யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களின் உதவியுடன் சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் நடாத்தியதுடன் எம் மன்ற இளைஞர்களுக்குள் உடனடி முதலுதவிப் பிரிவை உருவாக்கி காயமடைந்தவர்களிற்கு கட்டுப்போட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளையும் செய்து வந்தோம்.

## யுத்தத்தால் சிதைந்த எம் கனவு

அன்று ஈழத்தில் குறும்படத் தயாரிப்பு பற்றி பல முயற்சிகள் நடைபெற்றன ஆதலால் எம் மன்ற கலைஞர்களும் எமது ஊரின் சமூக கலாசார விழுமியங்களை வெளிப்படுத்த குறும்பட தயாரிப்பிற்கு ஒன்று கூடினர். அதற்கென கதை, உரையாடல், நடிகர், காட்சிக்களம் என்பனவற்றுடன் படப்பிடிப்பிற்கான கருவிகள் பணம் என்பனவும் பெற்றுக்கொள்ளப்பட்டது கமறா, விடியோ, கசெற், டெக் என்பன அருட்தந்தை மத்தியஸ் அடமும் நிதி அன்று கியூடெக் நிறுவனத்திற்கு பொறுப்பாயிருந்த அருட்தந்தை.

இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இவைகள் அனைத்தையும் எமது பங்கில் உதவிப் பங்கத்தந்தையாக இருந்த ரவிச்சந்திரன் ஊடாக எமக்கு வழங்கப்பட்டது அத்துடன் ஒவ்வொரு அங்கத்தவரின் பங்களிப்பாக 1லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் சேகரிக்கப்பட்டது. இறுதியில் இடம்பெயர்வு ஏற்படவே எம் கனவு கனவாகவே தொடர்ந்தது.

## முதற் கல்விச்செயற்பாடு

எம்மையும் எமது செயற்பாட்டையும் எம் சமூகத்திற்கப்பாலும் கொண்டு செல்லும் நோக்குடன் பொது அறிவு சார் வினாத்தாள் தயாரித்து போட்டி ஒன்று நடாத்தினோம். இதில் ஏனைய மன்றங்களுடன் யாழ் மாவட்டத்தில் உள்ள கணிசமான பாடசாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்களும் பங்குபற்றினார்கள் இரண்டாயிரத்திற்கு மேல் வினாத்தாள் விற்பனை செய்யப்பட்டு வெற்றியீட்டியவர்க்கு பரிசிலும் வழங்கப்பட்டது.

## இடப்பெயர்வின் போது

மாபெரும் புறப்பாடு என வர்ணிக்கப்பட்ட 95ஆம் அண்டின் இடம் பெயர்வின் போதும் எமது இளைஞர்கள் தமது சேவையை கடமையை மறக்கவில்லை எம் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து, ஜெயபுரம், கிராஞ்சி, பள்ளிக்குடா, நாச்சிக்குடா போன்ற இடங்களிலேயே குடியமர்ந்தனர் அங்கு அவர்கள் தமது வாழ்விடங்களை அமைக்க எம் இளைஞர்கள் பற்றைக் காணிகளை துப்பரவு செய்து கொடுத்ததும் கண்கூடு.

## இடப்பெயர்வின் பின்

மீண்டும் எம் மண்ணிற்கு திரும்பிய பின் எம் சிறார்கள் கல்வியில் ஊக்கமுடன் செயற்பட கல்விசார் போட்டி ஒன்றை நடாததினோம். இதில் பேச்சு, கட்டுரை, ஓவியம் என்பவற்றுடன் ஆங்கிலச் சொற்களில் சொல்வதெழுதல் என்பன 3பிரிவுகளாக நிகழ்த்தப்பட்டன இப் போட்டியின் பரிசில்களுக்கென நிதியுதவியவர்களை நாம் என்றும் மறவோம்.

## விளையாட்டுப்போட்டி

நீண்ட காலமாக எம் மன்றத்தினூடாக கல்வி சார் போட்டிகளே நடைபெற்று வந்தது அதிலிருந்து சற்று விலகி விளையாட்டுப்போட்டி ஒன்றை நடாத்தினோம் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் ,மென்பந்தாட்டம் என்பன ஆண்களுக்குரிய போட்டியாகவும், கூடைபந்தாட்டம், கிளித்தட்டு என்பன பெண்களுக்குரிய போட்டியாகவும் நிகழ்த்தப்பட்டது. இதனூடாக எம் ஊரின் உள்ள உள்ளக விளையாட்டுக் கழகங்கள் புத்துயிர் பெற்ற பொழிவுடன் மிளிர்ந்ததும் அறிந்ததே

## தொடர்பு சமூகசேவை

ஆலயம் சார்ந்த திருவிழா விசேட வழிபாட்டு நாட்களை முன்னிட்டு ஆலய துப்பரவு, சோடினை போன்றவற்றுடன் இரு பாடசாலைகளில் தேவையின் பொருட்டு தப்பரவு நடவடிக்கை என்பவற்றைக் கூறலாம்.

## இடம்பெயர்வின் பின் கலைச் செயற்பாடு

இடம்பெயர்வின் பின் நடைபெற்ற கல்விசார் போட்டி பரிசளிப்பு விழாவின்போது முதல் நாடகமும் தொடர்ந்து ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட நாடகப் போட்டிகளில் பல தடவைகள் பங்கு பற்றியதுடன் 1997ஆம் ஆண்டு புனிதரின் விழாவை ஒட்டி ஒரு நாட்டுக் கூத்தும் வேறு பல நாடகங்களும் மேடையேற்றப்பட்டது. மற்றும் வடி ஒளிப்பு, பிரச்சார வீதி நாடகமும் ஆற்றுகை செய்தோம்.

குருநகர் ஆண், பெண் இருபாலாருக்குமிடையில் நல்லுறவு உண்டு என்பதை எடுத்துக் காட்ட ஒரு கோலாட்டமும் மேடையேற்றினோம் இடம்பெயர்வின் பின் எமது சமூகம் கலைச் செயற்பாட்டில் பெரும் பங்காற்றிய பெருமை எம் மன்றத்திற்கே உரியது.

## ஆணைக்குழு போட்டியில் நாம்

எமது பங்கில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என இரு மன்றம் செயற்பட்டது ஆனால் இப்போட்டியில் பங்கு பற்றுவதற்காக இரண்டு மன்றங்களையும் இணைத்து இளையோர் ஒன்றியம் ஒன்றை உருவாக்கினோம். அதன் பெயரிலேயே போட்டிகளில் பங்கு கொண்டோம்.

யாழ் மறைக்கோட்ட இளையோர் அவையினால் மூன்று தடவைகள் இளைஞர் மன்றங்களுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றது மூன்று தடவைகளும் போட்டியில் பங்கு கொண்டு வெற்றிபெற்ற நிலைக்களுக்கிடைப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் எமது மன்றமே முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

நாடகப்போட்டி, சஞ்சிகைப்போட்டி, உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிளித்தட்டு, வினாடி வினாப்போட்டி என் பல போட்டிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தினர் எம் மன்றம் அனைத்துப் போட்டிகளிலும் பங்கபற்றி எமது ஊரின் பங்கின் சிறப்பை அறியச் செய்து பெருமையுடன் சாதனை படைத்தனர் இது இவர்களின் திறமைக்கு சான்று.

## சிறப்பு சமூகசேவை

மன்றத்தின் உதவியை நாடி வந்தவர்களை நாம் ஒருபோதும் கைவிட்டதில்லை அவர்களுடைய தேவையை அறிந்து சமூகசேவை அடிப்படையில் நாம் உதவியுள்ளோம் குறிப்பாக இரத்ததானம் செய்யுங்கள் என்று எம்மை நாடி வந்தவர்களுக்கும் நாமே சென்று போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்து உள்ளோம்.

எமது ஊரில் மலசலகூட வசதியற்ற வீடுகளில் மலசலகூடம் கட்டுவதற்காக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி பொருள் உதவி வழங்கியது ஆனால் குழி வெட்ட வசதியற்ற குடும்பங்களுக்கு பங்குத்தந்தையின் சிபாரிசின் பெயரில் அவரது வேண்டுகோளுக்கு இணங்கி குழிகள் வெட்டிக் கொடுத்துள்ளோம்.

மேலும் விழிப்புணர்வற்றோர் சங்கம் இசை நிகழ்வு நடாத்துவதற்கு நுழைவுச்சீட்டு விற்பதிலிருந்து அரங்கேறுவது தொடர்பான அனைத்து அலுவல்களுக்கும் எம் மன்றம் அனுசரனையாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கரோல் குழு

எமது மன்றம் ஆரம்பம் முதல் இன்றுவரை குருநகரில் உள்ள வீடுகள் தோறும் சென்று கரோல் கீதம் பாடி மகிழ்வித்து வந்துள்ளோம். இதை எம் பெரும் பாக்கியமாகவே கதுதகின்றோம். மக்களின் வரவேற்பும் எம்மை மேலும் உற்சாகப் படுத்தியது.

இரண்டு வருடங்களாக வலயங்கள் தோறும் குறிப்பிட்ட இடங்களில் நிகழ்வினை மேற்கொண்டோம் மக்கள் இதை ஏற்க மறுத்தனர் கிறிஸ்மஸ் பப்பா தம் இல்லத்துள் வருவதை விரும்பினர் மீண்டும் தொடர் வருடங்களில் ஒவ்வொரு வீடாகச் சென்று பாடி குடும்பங்களை மகிழ்வித்து வருகின்றோம்.

## கையேட்டுப் பிரதி

இடப்பெயர்வின் முன் எம் சிந்தனையில் பதிந்ததை இடப்பெயர்வின் பின் செயல்வடிவம் ஆக்கினோம் "ஓடம்" என்ற சஞ்சிகையின் வெளியீடு இதனை நாமும் மகளிர் மன்றமும் இணைந்தே வடிவமைத்து வெளியிட்டதும் பெருமைக்குரியதே அடுத்து ஆணைக்குழுவால் நடாத்தப்பட்ட போட்டிகளிலும் கையேட்டு சஞ்சிகை போட்டி நடைபெற்றது அப்போட்டிகளில் நாம் தனித்து நின்று "சிற்பி" என்ற பெயரில் பங்கு கொண்டோம் தொடர்ந்து 4 பக்கங்களைக் கொண்ட மாதாந்த கையேட்டுப் பிரதி 6 மாதங்களாக வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## புலம்பெயர்ந்த மகிமை அங்கத்தவர்களின் பங்களிப்பு

எமது மன்றத்தில் இருந்து வெளிநாடு சென்று வசிக்கும் மகிமை அங்கத்தவர்களை முதலில் நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம் மன்றத்தின் ஒவ்வொரு பாரிய செயற்பாட்டிற்கும் தங்களால் உதவக்கூடிய அதிகூடிய பண உதவிகளை வழங்கியுள்ளார்கள் அத்துடன் திருமணமான மகிமை அங்கத்தவர்களும் தமது உடல் உழைப்புடன் பணவுதவியும் வழங்கி எம்மையும் தம் மன்றத்தையும் சிறப்பு அடையச் செய்து வருகின்றனர் இவர்களின் ஆசியுடன் இன்னும் பல காலம் பல செயற்பாட்டில் வளரும் என்பதில் ஐயமில்லை.

## இருண்ட காலம்

எமது இருண்டகாலம் என்பதை விட எம்மன்றத்தின் மீதும் இளையோர் மீதும் ஏற்பட்ட கண்ணூறு என்றே சொல்லவேண்டும் குறுகிய காலத்துள் பரந்த செயற்பாட்டை கொண்டவர்கள் எம்மை கண்டு அஞ்சாதவரும் இல்லை வியக்காதவரும் இல்லை இருப்பினும் இருண்டகாலம் நீளவில்லை மீண்டும் 10வது ஆண்டை பெருமையுடன் கொண்டாட மீண்டும் புதுப்பொலிவுடன் வலம் வருவது எம் இளமையின் "இணைந்த உறவில் சமூக உயர்வே"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிதி வளம்

ஆரம்ப முதல் இன்று வரை அங்கத்தவர்களின் உடல் உழைப்பாலும் ஒவ்வொரு பங்குத்தந்தையர்களிடம் இருந்தும் ஊரில் உள்ளவர்களிடமிருந்தும் புலம் பெயர்ந்த அங்கத்தவர்களிடம் இருந்தும் பெறப்படுவதும் வருடந்தோறும் மேற்கொள்ளப்படுகின்ற கரோல் பாடல் மூலம் ஒவ்வொரு குடும்பங்களால் கொடுக்கப் படுவதையும் மேலும் தேவைகருதி கலை நிகழ்வுகள் ஊடாகவும் பெறப்படுகின்றது.

மேலும் எம் மன்றத்தையும் எம் இளையோர்களையும் வளர்க்கவும் திறமைகளை மேம்படுத்தவும் நிதியதவி வழங்கிய ஒவ்வொரு உள்ளங் களிற்கும் நாம் இறக்கும் வரை நன்றியுடையவர்களே.

### வளர்ச்சிப் பங்கெடுத்த பங்குக் குருக்கள்

அருள்திரு. R. M. G. நேசநாயகம்
அருள்திரு. ஜெயச்சந்திரன்
அருள்திரு. ம. இ. ரவிச்சந்திரன்
அருள்திரு. அன்ரனிப்பிள்ளை
அருள்திரு. யூட்அமலதாஸ்
அருள்திரு. மெனிப்பேஸ்
அருள்திரு. எஸ் யோய். ஸ்ரனிஸ்ரன்
அருள்திரு. அருட்செல்வன்
அருள்திரு. அ. பி. ஜெயசேகரம்
அருள்திரு. ஆர். எச். சகாயநாயகம்
அருள்திரு. சா. யஸ்ரின்
அருள்திரு. தயாபரன்

### வளர்ச்சியில் நன்றிக்குரியவர்கள்

பங்கின் குருக்கள்







புலம் பெயர்ந்த அங்கத்தவர்கள்
மகிமை அங்கத்தவர்கள்
ஊரின் பெரியவர்கள்
ஊர் மக்கள்
ஆலயப் பங்குச்சபை
ஆலய பக்திச் சபைகள்
யாகப்பர் சமய சமூக மகளீர் மன்றம்
திருமறைக்கலா மன்றம்
கடற்றொழில்சார் சங்கங்கள்
விளையாட்டு கழகங்கள்

10 ஆண்டிற்குள் ஐந்து தலைமுறையினரைக் கண்ட எம் மன்றமானது பல செயற்பாடுகளை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளது. இந்த காட்டாறு வெள்ளமான இளமை பக்குவப்படுத்தி பண்படுத்தி ஒழுங்கான முறையில் திசைதிருப்பப்பட்டால் அதனால் இளமையும் இளைஞரும் எம். சமூகமும் ஓர் முன்னேற்ற கரமான சமூகமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை

இதை யாரு செய்வது இவர்களுடன் யார் கதைப்பது என்ற கௌரவ கொள்கைகளுடனும் தானும் எனது சந்ததியும் தப்பினால் கானும் என்ற மன உணர்வுடன் வாழ்பவர்களும் தம்மையும் சம சந்ததி சமூகம் நலம் பெற உயர்வு பெற பொது நோக்குடன் செயற்படுவோமானால் மற்றவர்கள் வாயைப் பிளக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மேலும் இன்னும் பல ஆண்டுகள் சேவை ஆண்மீகம், கலை, கலாச்சாரம், கல்வி என்பனவற்றில் உயர்வார்கள். அவர்களின் சேவையும் பணியும் ஆல்போல் பரவி எம் சமூகம் நிழல் பெற வாழ்த்துகிறேன்.

**யே. பிரபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குருநகர் மக்களின் கல்விநிலை

*"அறியாமை என்ன பேசினும் கல்வி மதிப்புடையதே"*

*(ஜீன்டிலா வ்பாண்டோ)*

கணணியில் கல்வி பயிலும் காலத்தில் மிலேனியம் நூற்றாண்டில் தவழும் உலகத்தில் எம் மக்களின் கல்விநிலை பற்றி துறைசார் கல்வி மூலம் (formal Education) அய்வின மேற்கொண்டு இம் மொட்டு மலராகின்றது.

குருநகர் மக்களிடையே பரவியுள்ளோரை தெளிவாக அறிந்து கொள்ள இவர்கள் கல்வி நிலையை ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி என்ற மூன்று படிகளில் நோக்கல் சாலச்சிறந்தது.

### ஆரம்பக்கல்வி (Primary Stage)

ஒரு சமுகத்தின் உயர்ச்சியை மதிப்பிடுவது அச்சமூகத்தின் எழுத்தறிவுடையோர் வீதமே எழுத்தறிவுடையோரைத் தீர்மானிப்பது ஆரம்பக்கல்வியே (1 -5) குருநகரில் எழுத்தறிவு வீதம் 96 – 98%இற்கு இடைப்பட்டதாகவே காணப்படுகின்றது இந்த வெற்றியின் பின்னணி யாதெனில் குருநகரை மையமாகக்கொண்டு 7பாலர் பாடசாலைகளும் குருநகரை அண்மித்ததாக 3 பாலர் பாடசாலைகளும் இருப்பதேயாகும்.

### இடைநிலைக்கல்வி (secondary Stage)

இடைநிலைக்கல்வியை ஆண்டு 6 தொடக்கம் க.பொ.த (உயர்தரம்) வரை வரையறுக்கலாம் இக் கல்வி நிலையை மதிப்பீடு செய்வதற்கு க.பொ.த சாதாரண உயர்தர பரீட்சை முடிவுகள் குறிகாட்டிகளாக அமைகின்றன.

புனித யாகப்பர் ஆலய 125ஆம் ஆண்டு நிறைவு மலரில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் "ஆரம்பக்கல்வியோடு தமது படிப்பை நிறுத்திக்கொள்பவர்களில் பெண்களைவிட ஆண்களே அதிகம். ஆண்பிள்ளைகள் இளமையிலேயே தம் தந்தைக்கு தொழில் விடயங்களில் துணைபுரிய வேண்டியிருத்தல் இதற்கு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகும்." 1995ஆம் ஆண்டு வரையிலும் இந்த நிலையே எமது சமூகத்தில் இருந்தது. அனால் நாம் மேற்கொண்ட ஆய்வுகளுக்கமைய இன்றைக்கு இந்தநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது கண்கூடு. இதற்கு நாம் குறிப்பிட்டுள்ள புள்ளி விபரங்களே சான்றாகும் 95இற்கு முன்னர் 60% ஆனோர் இடைநிலைக்கல்வியை தொடர்ந்துள்ளனர் ஆனால் தற்சமயம் 80-25%இற்கு இடைப்பட்டவர்கள் இக்கல்விவியைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்.

## மூன்றாம் நிலைக்கல்வி (Final Stage)

பட்டப்படிப்பு, உயர்தொழில் நுட்பக் கல்லூரி, துறைசார் பட்டப்படிப்பு, கணக்காளர் பட்டியக்கல்வி, சட்டக்கல்வி, கலைக்கல்வி என்பனபோன்ற உயர்கல்வியினையே மூன்றாம் நிலைக்கல்வி என்பர் 1986 யாழ் மாவட்டம் உயர்கல்வியுடையோர் 1.5 வீதமாகும். குருநகரில் இது 0.07% ஆகக் காணப்படுகின்றது ஆனால் இன்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் பல்கலைகழக அனுமதி விகிதாசாரம் பார்க்கும்போது 8% ஆனோர் நேரடியாக அனுமதி பெறுகின்றனர் இதைவிட வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களிலும், வெளிவாரிப்பட்டப்படிப்புக்களிலும் (GAQ), தொழில்நுட்பக்கல்லூரி, மீன்பிடி டிப்ளோமா உடற்கல்விடிப்ளோமா போன்ற வற்றின் மூலம் 7% அனோர் மூனன்றாம் நிலைக் கல்வியைத் தொடர்கின்றனர் குறிப்பிட்டுக் கூறப்போனால் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேறியவர்களில் 15% ஆனோர் மூன்றாம் நிலைக்கல்வியை வெற்றிகரமாகத் தொடர்கின்றனர்.

## கல்வி மேம்பாட்டு வெற்றியில் பெற்றோரின் பங்கு

1995ஆம் புலம் பெயர்வின் பின்பே எமது சமூகத்தில் கல்வியின் வளர்ச்சியில் பாரிய மாற்றம் காணப்பட்டது கடற்றொழிலையே நம்பி வாழ்ந்த எமது சமூகம் இடம் பெயர்வின்போது கடலிலே தமது உறவுகளை இழந்தும் கடற்றொழில் முற்றாக முடக்கி விடப்பட்டும் இருந்த சமயத்தில் வேற்றுத்தொழில் எதுவும் தெரியாமல் இருந்த எமது சமூகம் பல்வேறு சிக்கல்களையும் சொல்லனாத் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு ஆளாகியது இந்த நிலைமையே எமது சமூகத்தின் பெற்றோருக்கு தமது பிள்ளைகளிற்கு கல்வி அறிவை ஊட்டுவதற்கு ஈடுபாட்டை அதிகரித்தது பெற்றோர்கள் பெரும்பாலும் தங்களுடைய ஆடம்பரங்களைக் குறைத்துக்கொண்டு பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் இயலுமானவரை தம்மையே அர்பணித்தமையே எமது சமூகம் கல்வி வளர்ச்சியில் உயர்ச்சி கண்டிருப்பதற்கு முக்கிய சான்றாகும்.

## கல்வி மேம்பாட்டு வெற்றியில் சமூக சேவைகள் அமைப்பின் பங்கு

புலம் பெயர்ந்த நாடுகளிலே வாழும் எம் உறவுகள் இந்த சமூகத்தில் வாழும் உறவுகளை நினைத்து கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் வகையில் உதித்த ஒரு எண்ணக்கருவே ஜேர்மன் கல்விக்கழகம், பிரான்ஸ் கல்விக்கழகம், கனடா, அமெரிக்கா சமூகசேவைகள் அமைப்பு போன்றவை தோற்றம் பெற வழி சமைத்தது எமது குறுகியகால கல்வி வளர்ச்சியில் இவற்றின் பங்கு அளப்பரியதே புலமைப்பரீட்சை, க.பொ.த சாதாரணம், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஊக்குவிதத்து மட்டுமன்றி அவர்களைக் கௌரவப்படுத்தியதும் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு எடுத்துக்காட்டான செயற்பாடாக அமைந்தது அரசிடமிருந்தோ, வேறு அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தோ பெரிய அளவிலான உதவிகளைப் பெறாமலேயே எமது புலம் பெயர்ந்த உறவுகளின் உதவிகளின் மூலமே கல்வித்துறையில் பல ஆக்கபுர்வமான செயற்பாடுகளைப்புகுத்தி அத்னூடே வெற்றியும் கண்டுள்ளது எமது சமூகத்தில் உள்ள சமூக முன்னேற்ற அமைப்புக்கள்.

இவை மட்டுமல்லாது குருநகர் க.அ.சங்கம், சிறகுவலைசங்கம், இழுவைமடிசங்கம், குத்தகையாளர் சங்கம், வாடிக்குழு போன்ற சில உள்ளூர் அமைப்புக்களும் தங்களால் முடிந்தவரை சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் கைகொடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மின்சார வசதியின்மை வீட்டு இடநெருக்கடி, சுயகற்றல் (Self Studies) போன்றவற்றைக் கருத்தில்கொண்டு உருவாக்கப்பட்டதே இரவுப்பாடசாலைகள் (Night Studies) ஆகும் சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை புனித யாகப்பர் மண்டபம், றெக்கிளமேசன் சனசமூகநிலையம், சென்றோக் சனசமூகநிலையம், தொடர்மாடி போன்றவற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரவுப்பாடசாலைகள் நடைபெற்றன இவற்றில் சிலவற்றிக்கு குருநகர் ஐக்கியமுன்னணியும் சிலவற்றிற்கு அந்த நிர்வாகங்களுமே பொறுப்புகளாய் இருந்தன.

"அறிவகம்" என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலம் ஆகின்றது ஆயினும் 'எழுத்தறிவூட்டல்" என்ற மூலக்கொள்கையுடன் தனிப்பட்ட ஒருவருடைய அமைப்பாக செய்றபடுகின்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை தவிர சென்ஜேம்ஸ் ஆண், பெண் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாய் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட சில நபர்களும் சமூகவேசவை அமைப்புக்களும் கொடுப்பனவை வழங்கி ஊர் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன. என்பதே உண்மை.

## ஊர்ப் பாடசாலைகளின் பங்கு

இவ்வூரில் உள்ள மாணவர்களின் ஏறக்குறைய 60% ஆனோர் சென்ஜேம்ஸ் ஆண், பெண் பாடசாலைகளிலேயே கல்வி கற்கின்றனர். இவ்வூரின் கல்வி வளர்ச்சி வீதத்தில் ஆளுமை செலுத்துவது இவ்விருபாடசாலைகளுமே. ஆய்வுகளுக்கமைய ஆண்கள் பாடசாலையை விட பெண்கள் பாடசாலையே கல்வி வளர்ச்சியில் உயர்ச்சிக்குள்ளது. இதற்குக் காரணம் ஆண்கள் பாடசாலையில் நுன்மதி கூடியவர்கள் இடையில் வேறுபாடசாலைக்கு செல்வதும், குருநகரில் பெண்களைவிட ஆண்களே விளையாட்டுத்துறையில் அதிக ஆர்வம் காட்டுகின்றமையே பெண்கள் பாடசாலையில் க.பொ.த (உயர்தர) வகுப்பு குறுகிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டமையும். இந்த வித்தியாசத்தின் காரணமாய் அமைகின்றது.

ஆயினும் பட்டதாரி ஆசிரியர்களின் அதிகரிப்பும், பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் வருகையும் பழைய மாணவர்களின் உந்துதலும் மேலும் ஊர்ப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் வலுச்சேர்க்கும் என்றால் மிகையாகாது.

இலைமறைகாயாக இன்னும் பல உள்ளூர் அமைப்புக்கள் என்னலமற்ற முறையில் தமது கணிசமான பங்களிப்பை எமது ஊர் கல்வி வளர்ச்சியில் பங்கெடுக்கின்றன என்பதே உண்மை ஆனால் சிலர் தமது பெயர்களைக் குறிப்பிட மறுத்தும், சில அமைப்புக்களின் பதிவுகள் எமது தவறால் ஆய்வுக்கு உட்படுத்த முடியாமல்ப் போனது துரதஸ்சவமே.

## எதிர்காலம்

எம்முடைய சமுகத்தில் கல்வி வளர்ச்சியானது பருமட்டான அளவிலேயே வளர்ந்து செல்கின்றது. ஆகவே எது முற்றுமுழுதாக வளர்ச்சியடைய வேண்டுமாயின் பெற்றோர் இன்னும் அதிகமாக தங்கள் பிள்ளைகள் மட்டில் தமக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றவேண்டும். இயன்றளவு பெண்களைவிட ஆண்பிள்ளைகளுடன் நம்முடையே உள்ள உறவை வைத்தக்கொண்டு அவர்களிடம் நெருக்கமாக பழகி அவர்களின் தேவைகளை புரிந்துகொண்டு அதற்கமைய தங்களை மாற்றிக்கொள்வதன் மூலமே இலக்கை வெற்றிகரமாக அடையமுடியும் பாடசாலைகளில் பிற கல்வி நிலையங்களிலும் பிள்ளைகளால் பெறப்படும் கல்வியானது பெருபாலும் அறிவியல் சார்ந்ததாகவே அமையும் ஆனால் பெற்றோர்களால் புகட்டப்படும் கல்வியானது கல்வி அறிவைமட்டுமல்லாது பழக்க வழக்கம், ஒழுக்கம், விட்டுக்கொடுத்தல், தலைமை தாங்குதல், தனித்துவம் வாய்ந்த பரம்பரை கலையுணர்வு, தெளிவான சிந்தனை, பெரியோரை மதித்தல் போன்ற இன்னும் பலவிதமான மனித விழுமியங்களை தன்னகத்தே கொண்டு வளர உறுதுணையாக அமையும்.

மேலும் உள்ளூர் வெளியூர் சமூகத்சேவை அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றினைந்து செயல்ப்படுவதன்மூலம் எமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றலாம் என்பது உறுதி. எழுத்துக்கள் தனித்தனியாக இருந்தால் சொறகள்வராது சொறகள் தனித்தனியாக இருந்தால் வார்த்தை வராது வார்த்தை ஒன்றுசேரும் போது அர்த்தமுள்ள ஒரு முழுமையான வசனத்தை உணரமுடியும் அதுபோலவே அனைத்து சமூக சேவைகள் அமைப்பும் புரிந்துணர்வுடன் இணைவதன் மூலம் எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்க்கும்.

"கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கிற்கு அமைய கல்வியின் சிறப்பை உணர்ந்தும் "கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்ற வார்த்தையின் வாக்கிற்கு அமைய நாம் வாழ்ந்து காட்டுவதன் மூலமே எம் சமூகத்தின் நன்மதிப்பு காக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள்
125வது ஆண்டு நிறைவுமலர்
புனித யாகப்பர் ஆலயம்
குருநகர் சென்ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் (ஆதரவு பிரான்ஸ் அமைப்பு)
குருநகர் சென்ஜேம்ஸ் ஆண்கள், பெண் பாடசாலைகள்
குருநகர் ஜோசவ்வாஸ் இளைஞர் மன்றம்
குருநகர் புனித யாகப்பர் ஆலயம்

ப. பிரியானந்தன்

## அந்தக் கணங்களுக்காய்

மெல்லமாய் எழுந்து
செல்லமாய் வந்து - எனது
கால்களைக் கொஞ்சி
களிப்பினை ஊட்டும்
அழகிய அலைகளே!

சுனாமி அலைகள்
சுருண்டெழுந்து
ஊர்களையெல்லாம்
தாக்கிச் செல்ல
குருநகரில் நீ
குருகுலத்தவரைக் காக்க
சஞ்சலம் எதுவுமின்றி
அமைதியாய் இருந்த
அழகினை நானும்
எப்படித்தான் வர்ணிப்பது

வார்த்தைகள் எதுவும்
வாயில் வரவில்லை
வருடிச் சென்ற - உன்
வன்மையான
பொறுமையை நினைக்க!

உன் நிலத்தார் வாழ
நீ செய்யும்
நிறைகாரியங்கள்
நிதமும் இங்கே
நிலைக்க வேண்டுகிறேன்.

யே. சாள்ஸ் அன்ரனி

## இளைஞரே!

வாழ்க்கை என்ற கடல்தனில்
நீந்திக் கடக்கும் ஆழமான ஆழியாய்
எம்மவர் நெஞ்சினிலே அகலா
தீபச்சுடராய் திகழ்வது
அமிர்தமான இளமை காலமே

நாளைதனில் நாட்டையே
ஆளும் தலைவர்கள் - இன்று
சாலைதனில் கூடி அமர்ந்து
சீட்டுக்களையும் சேட்டைகளையும்
கைவசமதில் கொண்டுள்ளீரே

காதல் என்ற வலையில் சிக்கி
காமம் என்ற சேற்றில் அமிழ்ந்து
கண்ணியமதை இழந்து
கடமைதனை மறந்து
எதிர்காலமதை வீணாக்கினீரே

பேதையவள் முகம் கண்ணில் புதிய
கனவுகள் நெஞ்சில் அலைமோத
காலமதை கழித்த நீ
கல்விதனில் தேர்ச்சி பெற்று
பட்டமதை பெற மறந்ததேனோ

தோழமையரது வாய்மொழியது
தேன் போல் இனிக்க
ஐயிருமாதம் உதிரத்தில் சுமந்த
அன்னையவள் வார்த்தை
வேப்பங்காயாய் கசந்ததேனோ

இளைஞரே!
உங்கள் குடும்ப பொறுப்பென்ன?
வாழ்வின் குடும்ப பொறுப்பென்ன?
உங்கள் கனவுகள்தான் என்ன
வெற்றி தோல்வியென்ன
இவ்வினாக்கள் தனை உம்மனதில்
ஒருகணம் கழுப்பியதுண்டா?
உங்கள் சிந்தனைக்காகவே இக்கவித்துளி

சு. விஜூசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்ந்து காட்டுவோம்

**நா**ட்டின் போர் சூழ் நிலையில் வாழ்கின்ற மக்கள் சந்திக்கின்ற சிறிய, பெரிய காரியங்கள் ஒவ்வொன்றும் நாம் மக்களின் அடி மனதை ஒரு கணம் உலுக்கி விடுகிறது.

குறிப்பாக இப் போர்ச் சூழ் நிலையில் நடக்கின்ற வன்முறைச் சம்பவங்கள். முன்பு நடந்த குண்டு வெடிப்பக்கள் கண்முன் நம் உறவினரின் கற்பிற்கு களங்கம் விளைவித்தல், என்றும் எம் சகோதர, சகோரரிகளின் உயிர் இழப்பு, உறவுகளின் பிரிவு, தனிமை, சொத்துக்களை, சொந்தங்களை இழந்து அகதிகளாக வாடி நின்றவேளையில் "சுனாமி" என்னும் பேரனர்த்தம் தந்த பல கோர நிகழ்வுகளில், உயிர், உறவு, வீடு, சொத்து, சந்தோசம், இப்படியாக எத்தனை எத்தனை இன்னல்களில் தம்மை ஆழ்த்தி, ஆறாத்துயரில் அவதியுறும் மக்கள் துவண்ட இந்நிலையில் இருந்து தம்மை தேற்றுவித்து மீண்டும் அவர்கள் வாழ்ந்து காட்டுகிறார்கள்.

ஆனால் கோர நிகழ்வுகளை அனுபவித்தத மக்கள் சிலர் இன்னும் இந்த பயம், பதட்டம், விரக்தி,தனிமை இவற்றில் இருந்து மீள முடியாது தவிர்ப்பதை உணர முடிகிறது. தம்மை ஒரு இறுக்கமான பய உணர்விற்குள் கொண்டு சென்று அதில் இருந்து வெளியேற முடியாமல் தவிர்ப்பதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

"சுனாமி" வந்த அன்று ரமேஷ் என்ற சிறுவன் தானும் தனது தங்கையும் கடற்கரை அருகில் வலையில் இருந்து மீன் பிரித்து போட்டு கொண்டு இருந்த வேளை சத்தம் போட்டனர் "ஓடுங்கள்" என்று நானும் தங்கையும் ஓடினோம் அதற்குள் அள்ளிக் கொண்டு என்னை ஒரு செத்தையில் செருகிவிட்டது. மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தேன் உடல் எல்லாம் காயம் ஒரே எரிச்சல் அப்படியே என் தங்கையை நினைவு வர அவளை பார்க்க, கை காலை அசைத்து நடக்க வலியுடன் நடந்தேன். அப்போது அதில் ஒரு பள்ளம் அதற்குள் தவறி விழுந்தேன் அதற்குள் ஒரு அக்கா மயிர் விரிந்து பாதி மணல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடி மீதி உடல் தெரிந்தது அதை கண்டு கத்திய நான் ஐயோ என்று மயக்கம் அடைந்தேன். பின்பு கண்விழித்து பார்த்தேன் மருத்துவ மனையில் இருப்பதை உணர்ந்தேன். என் தங்கை இறந்த செய்தியையும் தெரிந்து கொண்டேன்" என்றான்.

தங்கையை இழந்த அந்த சிறுவன் வயது 17, அந்த மாணவன் இப்போதும் அவனின் படிப்பில் கருவூன்ற முடியாமல் இருக்கின்றான்.

இப்போது ரமேஷ் உளவளத்துணை யாளர்களின் உதவியின் மூலம் அவனது பயம், பதட்டம், பதகளிப்பு, ஒரு தனிமை கல்வியில் குழப்பம் இதிலிருந்து அவன் மீட்சி பெற்றுள்ளான்.

ஷெரட்மில்லர், டானியல், லக்மன் ஆகியோர் நேரடி தொடர் பாடல் (Straight talk) எனும் நூலில் "பயம்" நான்கு வகைப்படும் என கூறுகிறார்கள்.

1. பிறருடன் கதைக்கப் பயம்
2. எதிர்த்து கதைப்பதற்கு பயம்
3. நெருங்கி பழக பயம்
4. அர்ப்பணிப்பதற்கு பயம்

### 1. பிறருடன் கதைக்கப் பயம்

நாம் எத்தனை விடயங்களை நம் மனதில் போட்டு புதைத்து வைத்துக் கொண்டு, எதை சொல்வது, எப்படி சொல்வது என்றும் சொன்னால் என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றும், சொன்னால் என்னையும் என் கருத்தையம் ஏற்ற கொள்வார்களா? அல்லது ஒதுக்கி விடுவார்களா? என கதையால் மற்றவர்கள் குழப்பி விடுவார்களா? என்று பலவாறாக பயப்பிடுகின்றோம்.

இதனால் கதைக்க வேண்டிய நேரத்தில் கதைக்காமல் விடுகின்றோம். வேற சிலர் கதைக்க தேவை அற்ற சந்தர்ப்பங்களில் கதைத்து பிரச்சினைக்குள்ளாகின்றோம்.

### 2. எதிர்த்து கதைப்பதற்கு பயம்

சிலர் எதிர்த்து கதைப்பதையே பொழுது போக்கவும் வேறு சிலர் எதிர்த்து கதைப்பதை தங்கள் பாதுகாப்பு கவசமாகவும் பாவித்து தங்களை தக்க வைத்து கொள்கின்றனர்.

தமது வாழ்க்கையில் பிறரின் சொல் அடிகளால் அல்லது வாழ்வின் பிற தாக்கங்களால் நொந்து போன சிலர் பிறரை எதிர்த்து கதைக்க தயங்குகின்றனர்.

### 3. நெருங்கி பழக பயம்

யாருக்கும் தெரியாமல் நம் அடி மனதில் புதைத்து வைத்திருக்கும் பல இரகசியங்கள் எமக்கு சுமையாக தோன்றும் போது எமக்கு நம்பிக்கைக்கு உரியவர்களிடமோ அல்லது உளவளத்துணையாளரிடமோ பகிர்ந்து கொள்வதன் மூலம் மனதின் சுமைகள் இறக்கி வைக்கப்படுகிறது.

ஆழமான ரகசியங்கள் ஒருவரை ஒரவர் நம்பி சமமாக பகிர்ந்து கொள்ளும் போது அங்கு அன்புறவு அர்த்தம் பெறுகிறது. உறவு பலமடைகிறது. அவ் வேளையில் ஆழ்ந்த தம் அடிமனது இரகசியங்கள் அடித்தளமான குடும்ப இரகசியங்கள் இங்கே பகிரப்படுகின்றது. அப்போது நட்பு நம்பிக்கை பெறுகின்றது. இந் நேரம் இருவரில் எவராவது ஒருவர் மற்றவருக்கு பங்கம் விளைவிக்க என்னம் போது, யாராவது ஒருவரை வீழ்த்த எண்ணும் போது அங்கே அவ நம்பிக்கை ஏற்படுகிறது உறவில் விரிசல் ஏற்படுகிறது.

இவ்வாறு உறவுகளில் அவ நம்பிக்கை துரோகம் என்பவற்றை பிறரால் அனுபவித்தவர் மேலும் நொந்து போகாமல் காத்து கொள்ள விரும்புவார் பிறருடன் நெருங்கி பழக பயப்பிடுவார்.

### 4. அர்ப்பணிப்பதற்கு பயம்.

எமது குடும்ப வாழ்விலும் சரி பொது வாழ்விலும் சரி அர்ப்பணம் என்பது தேவையாகும். கணவன் மனைவிக்காக அர்ப்பணிப்பதும் மனைவி கணவனுக்காக தன்னை அர்ப்பணிப்பதும், அலுவலங்களில் தன்னை அர்ப்பணிப்தும், விளையாட்டு கழகங்களில் தன் திறமைகளை அர்ப்பணிப்பதும் முக்கியமாகும் அப்படி தன்னை முழுமையாக அர்ப்பணித்த பணி, செயல் வாழ்வு சிறக்கும் என்பதில் சந்தேகம் இல்லை இவ்வாறான அர்ப்பணங்கள் அர்த்தம் பெறுகிறது. நம் தேவைகளை பூர்த்தி செய்ய இச் சமூதாயத்தில் பலரது (பங்கு) அர்ப்பணிப்பு அவசியமானது.

எந்த ஒரு பொது செயலையும் செய்ய தன்னை அர்ப்பணித்து, தன்னை ஈடுபடுத்தும் போதும் தன்னால் முடியும் என்று தன்னை ஏற்ற சுயமாக செயற்பட தொடங்கும் வேளையில் சில சுயநலவாதிகளாலும், நண்பர்களாலும் அவர்களுக்கு உளரிதியான தாக்கங்களை ஏற்படுத்தி அவர்களின் சொந்த நிலையை குழப்பி விடுதல் இவ்வாறான செயல்கள் அவர்களை முழுமையாக செயல்பட இயலாமல் போய்விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான சந்தர்ப்பத்தில் பாதிக்கப் பட்டவர்கள் தங்களால் முடியும் என்று தன்னை அர்ப்பணிக்கப் பயப்பிடுகின்றனர் பின்வாங்கிறார்கள்.

இப்படியான பயத்தால் தங்கள் திறமைகளை போர்த்தி மூடி வைக்கின்றார்கள், தன் மனதில் சக்தி இருந்தும் அதனை அடக்கி கவலையை தன் கவசமாக அணிந்து விழ்ந்து கிடப்பது, தன் அறியாமை என்பதை உணராமல் இருப்பதில் திருப்தி காண்கின்றனர் சிலர்.

இந் நிலையில் இயற்கையின் சனாமி அழிவு தந்த கோர நிகழ்வு போரினால் பாதித்த மக்கள் அவர்களின் நிலையில் இருந்து மீண்டும் வாழ்ந்து காட்டுகின்றனர் சிலர்.

சிலரோ இதன் பதட்டம், பதகளிப்பு உயிர் அச்சுறத்தல்கள், அதிர்ச்சி பயம் இதிலிருந்து இன்னும் விடுபடாமல் அவர்கிடத்தில் காண கூடியதாக இருக்கிறது.

சிலர் இப்பிரச்சினைகளை நீண்ட நாளாக அனுபவிக்கின்றனர். இவ்வாறானவர்கள் ஆபத்தான நிலைக்குச் செல்லும் நிலைக்கு காண கூடியதாக இருக்கிறது.

சிலர் தனிமையில் இருந்து தம்மை தேற்றுகின்றனர் சிலர் சடங்குகள், தெய்வ வழிபாடு, பொது நிகழ்வு, விளையாட்டு, மூச்சுப் பயிற்சிகள் போன்றவற்றை மேற்கொள்ளும் போதும், அன்றாட பணிகளில் தன்னை ஈடுபடுத்துதல் போன்றவற்றின் மூலம் இதிலிருந்து விடுபடலாம். பாதிக்கப்பட்டவரை அவரது அனுபவத்தை கதைக்க சொல்லி கட்டாயப்படுத்துவதை விட அவர் கதைக்க வரும் போது கதைப்பதும். அவர் அழுகின்ற போது அழாதே என்று சொல்லாமல் மனச் சுமைகளை இறக்கி வைக்க உதவலாம்.

கொடிய அனுபவங்கள் உடனே அவர்களை விட்டு போகும் என்று சொல்வதற்கில்லை.

ஆனால் அவர்களிடம் இருக்கும் சுமைகளை பகிர்தலின் மூலம் அவர்களின் மனப்பாங்கை குறைத்து கொள்ள முடியம்.

இத்தாக்கங்களை அனுபவித்த சிலரை பார்கின்ற போது அவர்கள் பொஞ்சம் கொஞசமாக தேறி அவர்களின் முயற்சியால் முன்னைய நிலையை விட இப்போது மகிழ்ச்சியாகவும் நல்ல மாதிரியாக வாழ்ந்து காட்டுவதை கண்டு மகிழ்ச்சியும் அடைந்துள்ளோம்.

உளப்பாதிப்பு யாருக்கும் எப்போதும் வரும் என்று சொல்ல இயலாது ஆனால் அதனை மறைத்து மேலும் விபரீதங்களை உள்ளாகாது உள வளத்துணையாளரையோ, உள ரீதியான மருத்துவ ரையோ, நாடி உள நலம் பெறுவோம்.

உடல் வலி சிறுமணி நேரம் வரை உறுத்தும். உள வலி அது சாகும் வரை உறுத்தும் ஆகவே அதை அடையாளம் காணுவோம். உள வளம் பெறுவோம்

எத்தனை முறை வீழ்ந்தோம் என்பது முக்கியம் அல்ல. எத்தனை முறை மீண்டும் எழந்தோம் என்பதே முக்கியம் வாருங்கள்.
உள வளம் பெறுவோம் - வாழ்ந்து காட்டுவோம்.

**ம. சுதாகரன்**



ஆண்டின் நிறைவுத் திருப்பலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எண்ணமே உயர்வு

"எண்ணத்தின் கருவறையில்
உற்பவித்தேன் - என்
இலட்சியத்தின் விளிம்பினில்
என்னை அறிந்தேன்!
உன்னதமான — என்
உழைப்பினில் உயர்வைக் - கண்டேன்!

என்பதற்கமைய "எண்ணம்" என்பது எம் மனதில் வேரூன்றிய ஓர் வெற்றிப்பாதை இலட்சியத்தின் சிகரமதில் பள்ளி கொள்ளும் ஓர் மனிதனுக்கு நல்ல எண்ணங்கள் அறிவினில் உறைந்திருக்கின்றன. எம் இதயத்துள் ஆழமாக தோன்றிய நல்ல எண்ணங்களின் மூலம் எம் உணர்வுகள், உறவுகள், புதுப்பிக்கப்படுகின்றது. இவைகள் புதப்பிக்கப்படும்போது உயர்வுக்கான வளர்ச்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றது உயர்வுகளை நோக்கி விரைந்து செல்லும்போது வெற்றியாளராக மாறுகின்றோம்.

எம் மனித வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஆசைகள் கற்பனைகள், தவிப்புகள், கனவுகள் என்பன இருக்கும் இவைகளுக்கு ஆழமான கருவாக விளங்குவது எண்ணம். ஒவ்வொரு மனிதர்களின் எண்ணங்களின் மூலம் தான் அவர்களின் வாழ்க்கை பாதைகள் முட்களாகவும் பூக்களாகவும் மலருகின்றன.

மானுட ஜீவியாய் இவ்வுலகில் ஜனனிக்கும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தன்னிகரில்லா தனிச்சிறப்புடன் வெற்றியாளனாக மாறக் கூடிய பிரமாண்டமான சக்தி அவனுடைய பிறப்பிலேயே மறைந்திருக்கின்றன எண்ணம், சிந்தனை, ஆற்றல் போன்றவற்றின் மூலமே அந்த சக்தி வெளிப்படுகின்றது எமது உள்ளார்ந்த ஆற்றல்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு எமது வாழ்க்கையில் ஓர் குறிக்கோளினை தெரிவு செய்து தூய்மையான எண்ணத்துடன் உழைத்து வெற்றி கொள்ள முயற்சிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர் எண்ணம் காந்தசக்தி கொண்டது. வசீகரிக்கும் தன்மை பெற்றது நம் எண்ணங்கள் அதன் விளைவுகளைப் பொறுத்து புறச் சூழ்நிலையில் உருவாகும். எங்கேபோக ஆசைப்படுகின்றோமோ அங்கே வழி பிறக்கும் நல் எண்ணங்கள் நம் ஆழ்மனதில் விதைக்கப்படும்போது மனிதன் உயர்வடைகின்றான் நல்ல விதைகள் நற்பயிர்களை உருவாக்குவதைப் போன்று நல் எண்ணங்கள் நல்ல மனிதர்களை உருவாக்கி, உயர்வுள்ள மேதைகளாக திகழவைக்கின்றது. இதற்கான அடிப்படை காரணம் அவர்களின் எண்ணம் வாழ்க்கை வரைந்த பாதையில் எண்ணத்தின் மூலம் உயர்வடைந்த மாமனிதர்கள் எத்தனையோ பேர் அவர்கள் ஒரு சிலரை ஆராயும்போது

வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் எதிர்கால இலக்கை பற்றி வினாவிக்கொண்டு இருந்தார் அப்போது ஒரு மாணவன் எழுந்து நான் "ஜனாதிபதியாக போறன்" என்று கூறினான் அந்த சிறுவன் வேறுயாருமல்ல அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தான். அவரது எண்ணம் உயர்ந்தது அதேபோன்று அவர் ஜனாதிபதியாக வாழ்ந்து மறைந்தார்.

மலையின் உச்சியில் ஓர் சிறுவன். வயது ஐந்துதான் இருக்கும் அவனின் பாட்டி அவனை தேடிக்கொண்டு வருகின்றார். அவனை காண்கின்றார் கண்டதும் உனக்கு இவ்வளவு பெரிய உயரத்தில் இருக்க பயம் இல்லையா? அவன் கூறுகின்றான் "பயம் என்றால் என்ன பாட்டி" இவன் உலகின் மிகவும் சிறந்த மாவீரனாக திகழ்ந்தவன் அவன் வேறும் யாருமில்லை அவன்தான் மாவீரன் நெப்போலியன்.

அடுத்து யூரிகெல்லர் என்ற இஸ்ரேல்காரன் ஒரு சமயம் தனது மன எண்ணங்களை ஒரு முகப்படுத்தி ஓர் உலோகத்துண்டை வளைத்துக் காட்டினார் எண்ணங்கள் நம்து உடலை மாத்திரம் பாதிப்பதில்லை பிற உயிர்களை பாதிக்கும், ஊடுருவும் ஏன் உயிரற்ற திடப்பொருட்களைக் கூட ஆட்டிப்படைக்கும் வலிமை படைத்தவை அவை ஆகவே தான் நாம் என்றும் நல்ல எண்ணங்களைப் பரவவிடுவது நல்லது.

இதேபோன்று நாமும் நல்ல எண்ணங்களை விதைப்போமானால் நாமும் உயர்ந்தவராக வாழமுடியும்.

வாழ்க்கை என்பது "உள்ளிருந்து வெளியே போகும் ஒரு செயல்" என ஓர் அறிஞர் கூறுகின்றார் அச்செயலை புரிந்து கொள்ள வேண்டும் விதை எப்படித்தண்ணீர்பட்டவுடன் பூரித்து மூளைவிடுகின்றதோ, அதே போல எண்ணங்கள், மனதிலே வளம் பெற்று வெடிக்க வேண்டும் வெளிவரவேண்டும் அதற்கு நாம் உள்ளத்தை பண்படுத்தவேண்டும் நமது எண்ணம் உயர்வடையவேண்டும் உயர்வடைவதன் மூலம் எண்ணங்கள் யாவும் புனிதமடைகின்றன. காந்தி, நேரு, பாரதி, அண்ணா என்ற பெரியோர்களின் எண்ணங்கள் புனிதமானவை உயர்ந்தவை உண்மை, நேர்மை, வீரம் இனிமை என்று எல்லாம் மகத்தான எண்ணங்கள் நாம் இதை நினைவில் கொள்ளவேண்டும் புத்தரின் எண்ணங்களால் சரித்திரம் எப்படி மாறியது என்பதை எண்ணிப்பாருங்கள் புத்தர் தம்முடன் எண்ணங்களைத் தவிரவேறு என்னகொண்டு வந்தார் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள் யேசு கீறிஸ்துவின் எண்ணங்கள், ஐரோப்பிய சமுதாயத்தையேமாற்றி அமைத்தது ஆபிரகாம்லிங்கன் காந்தி என்று இவர்களெல்லாம் எப்படிச் சில எண்ணங்களுடன் வந்து உலகின் சரித்திரத்தை மாற்றி அமைத்தார்கள்.

விரக்தியில் உறங்கிய எம் அடிமனதில் (Subcconscious Mind) படிந்திருக்கும் ஏழ்மைநோய், தன்னம்பிக்கை இன்மை, கவலை, பொறாமை எரிச்சல் சோம்பல் போன்ற எதிர்மறையான எண்ணங்களை (Nogative Thoughts) எம் இளைஞர்கள் அகற்றவேண்டும் நல் எண்ணங்களை மனதில் விதைத்து வாழ்க்கைப்பாதையில் வெற்றிகண்டிட உழைக்கவேண்டும்.

மனம் என்னும் கோப்பையினுள் ஆழ் மனம் என்னும் அடிப்பகுதியினுள், தீய எண்ணம் என்னும் எண்ணெய் உள்ளது இதனை வெளியேற்றுவது இயாலாது இருளை ஒழிப்பதை விட ஒளியை ஏற்றுவதுமேல் என்ற வாக்கிற்கு இணங்க நல்ல எண்ணம் என்னும் நீரை மனம் என்னும் கோப்பையினுள் ஊற்றிநிரப்பும்போது தீய எண்ணம் என்னும் எண்ணெய் மேல் எழுந்து வழிந்து விடுகின்றது. தண்ணீர் மூலம் நல்ல எண்ணங்கள் முழுவதும் உள்ளத்தில் நிரப்பப்படுகின்றது இவ்வாறு தொடர்ந்து நல் எண்ணங்கள் உள்ளத்தில் நிரப்பும்போது தீயகுணங்கள் வெளிக்கொணரப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாம் ஒவ்வொருவரும் நல்ல எண்ணங்களை மனதினுள் விதைத்து எம் ஆளுமையில் வளர்ச்சியடையவேண்டும் "மனிதர் சாகிறார்கள் ஆனால் எண்ணங்கள் சாவதில்லை அவை காற்றினில் மிதக்கின்றன." மாளிகைகள் இரவோடு இரவாக எழுந்து விடுவதில்லை ஒவ்வொரு கல்லாக அடுக்கப்பட்டுதான் உயர்கின்றன எனவே எம் வாழ்க்கைப் பாதையில் சிறந்த இலட்சிய புருஷர்களாக உருவாக நல் எண்ணங்களை மனதில் கொண்டு அவை வெற்றியடைய வீறுநடை போடுவோம் உங்களுக்கு என்று எண்ணியவற்றை "ஆம் என்னால் முடியும்." (Yes I Can) என்ற மனதையிரியத்துடன் செய்ய ஆரம்பியுங்கள் உங்களுடைய எதிர்கால இலட்சியங்கள் வெற்றி கொள்வதற்கு முதலில் எதிர்காலம் உங்களால் வெற்றிகொள்ளப்படும் என உணருங்கள்.

வெற்றியாளராக எண்ணுங்கள் (Think like a winner). வெற்றிபெற்றவராக உணருங்கள் (Feel like a winner). நிச்சியம் வெற்றி பெறுவீர்கள்.

**அ. கென்சிங்டன்**

## தாய்மை

வரம் ஒன்று கேட்டிடுவேன்
என்னை சுமந்த தாயை போற்றிடவே
ஈரைந்து மாதங்கள் தன் உடல் மறந்து
சேய் தன்னை வளர்த்திட

கருவறையில் எனைத்தாங்கி
உதிரத்தை பாவாய் பொழிந்து
வளர்த்திட்ட அன்னைதனை மறந்திடனே
இரவென்றும் பகலென்றும் பார்க்காது
காத்திடுவாள்
கண்ணும் கருத்துமாக வளர்த்திடுவாள்

உயிரைச் சுமக்கும் உத்தமி நீயே
நீ இன்றி மண்ணில் புன்னகையேது
உன் அன்பின்றி வாழ்வில் வசந்தம் ஏது
அன்னையின்றி வாழ்வில் இன்பமேது

**இ. குணசேகர்**

## சிந்திக்க சில துளிகள்

1. ஒரு விழாவில் கலந்து கொண்ட 20 பிரமுகர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் கை குழுக்கிக் கொண்டனர் மொத்தமாக எத்தனை தடவை அவர்கள் கைகுழுக்கிக் கொண்டனர்.
2. ஒரு கிரேக்க அறிஞர் கி.மு. 20ஆம் ஆண்டின் 260வது நாளில் பிறந்து கி.பி 60ஆம் ஆண்டின் 26வது நாளில் மரணமடைந்தார் அவர் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை.
3. 30M உயரமான கோபுரம் ஒன்றை சிறுவன் ஒருவன் ஏற எத்தனிக்கின்றான் அவன் ஒவ்வொநாளும் 3M தூரம் தனது பலவினத்தால் 2M கீழ் இறங்குகிறான் எனின் எத்தனை நாட்களில் கோபுரத்தின் உச்சயைச் சென்றடைவான்.
4. 3 பூனைகள் 3 எலிகளை 3 நிமிடத்தில் கொன்றால் 100 பூனைகள் 100 எலிகளை கொல்ல எடுக்கும் நேரம் எவ்வளவு
5. பூசகர் ஒருவர் ஒரு தொகுதிப் பூக்களை குளத்தில் கழுவும்போது அது ஆட்டிப்படையும் அதில் 8பூக்களை கோவிலுக்கு வைப்பர் எஞ்சியதை மீண்டும் கழுவுவார் இவ்வாறு 3தடைவை வைக்கும்போது மூன்றாம் தடவை எதுவும் எஞ்சவில்லை எனின் அவர் ஆரம்பத்தில் கொண்டுவந்த பூக்கள் எத்தனை.

## பொய்

மருத்துவன் பொய் சொன்னால் -"சேட்டிபிக்கேற்"
பொலிஸ்காரன் பொய் சொன்னால் - "சாட்சியம்"
கவிஞன் பொய் சொன்னால் - "கற்பனை"
அரசியல்வாதி பொய் சொன்னால் - "புள்ளிவிபரம்"
பத்திரிகை பொய் சொன்னால் - "பரபரப்பான செய்தி"
வக்கில் பொய் சொன்னால் - "வாதத்திறமை"
அமைச்சர் பொய் சொன்னால் - "ராஜதந்திரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இணைந்த உறவில் சமூக உயர்வு

**கா**லத்தின் தேவையுணர்ந்து அப்போதைய உதவிப்பங்குத்தந்தை ஜெயச்சந்திரன் அடிகளாரால் விதைக்கப்பட்ட விதைகளில் நானும் ஒருவன். அன்று நான் நினைக்கவில்லை இந்த விதை விழுந்து விருட்சமாகும் என்று விழுதுகள் விட்டு ஆலமரமாய் நிமிர்ந்துநிற்பது கண்டு வியப்படைகின்றேன். இளைய தலைமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அன்று எம்முடைய பங்களிப்பால் குருநகர் பதியில் எழுந்த குருநகர் யோசேவ்வாஸ் இளைஞர் மன்றமானது இன்று தனது 10வது நிறைவாண்டை கொண்டாடுவதையிட்டு உள்ளம் கனிந்து பூரிப்படைகின்றேன். அரசியல், வெறுமைக்குள் வாழும் இளைய சமூகம் ஆக்கபூர்வமான திட்டங்களை நெறிப்படுத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் நாங்கள் ஆரம்பித்த காலத்திலிருந்தே ஆண்டுதோறும் தனது செயற்திட்டங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து அதைச்சிறப்பாக நடாத்தி வெற்றி பெறுவதே வழமை. அதாவது அன்று நாம் கல்வி, விளையாட்டு, கலை இவற்றில் ஏதாவது ஒன்றைத்தெரிவு செய்து அதனை பங்கு மட்டத்தில் நடாத்தி வந்தோம் ஆனால் நீங்களும் 10வது நிறைவாண்டில் இரண்டு செயற்பாடுகளில் திறனை வெளிக்கொணர சிரத்தை எடுப்பது அங்கத்தவர்களின் செயற்பாடுகளின் இன்னுமொரு படிமானமேயாகும் மேலும் அங்கத்தவர்களின் ஒன்றிப்பின் செயற்பாடே சிறந்த வெற்றியின் இரகசியமாகும்.

கல்வியுடன் கலை நிகழ்வுகளை ஒருங்கிணைத்திருப்பது சாலச்சிறந்ததே அங்கத்தவர்களின் கலை ஆர்வத்தையும், திறன்சார் விருத்திகளையும் வெளிக்கொணர இந்தக் கலை நிகழ்வானது ஒரு கனமாக அமைகின்றது ஆற்றுகை வெற்றிபெற அல்லது உருவகம் பெற அங்கத்தவர்களின் இணைந்த உறவே வழிசமைக்கும் மன்றத்தினால் தரப்படும் சந்தர்ப்பத்தை நழுவவிடாது முழுமையாக பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொருவரினதும் கலை ஆர்வத்தையும், திறன்சார் விருத்திகளை வெளிக்கொணருவது மட்டுமன்றி தனிப்பட்ட திறமைகளையும், ஆளுமையையும் முன்னேற்றமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் போட்டிகளை சமூகமட்டத்தில் நடாத்துவதன்மூலம் கற்றல் மேம்பாட்டில் எமது மாணவர்களின் முன்னேற்றத்தில் இளையோர் ஆகிய உங்களின் பங்களிப்பு கடுகளவாயினும் அது காரமாய் இருப்பின் எமது மன்றத்திற்கு ஒரு வெற்றியே.

சிறபி, ஓடம் என்று கையேட்டுச் சஞ்சிகைகளையே அன்று நாம் வெளியிட்டோம் ஆனால் 10வது நிறைவாண்டில் சிறப்பு நிகழ்வாக அங்கத்தவர்கள் ஆக்கங்களை அமைந்தவாறு 10 ஆவது ஆண்டு சிறப்புமலர் என்ற தலைப்பில் வெளியிடும் சஞ்சிகையானது அங்கத்தவர்களின் துல்லியமான செயற்பாட்டின் இறுதிக்கட்ட ஒற்றுமையின் வடிவமேயாகும் சஞ்சிகை வெளியீடு என்பது சாதாரணமான விடயமல்ல, ஆனாலும் அசாதாரணத் துணிச்சல் கொண்ட துடிக்கின்ற இரத்தோட்டம் கொண்ட இளைய தலைமுறையின் அசாதாரண வெளியீட்டு வெற்றியாகவே இது அமையும்.

மன்றத்தினூடே உங்களையும், எங்கள் சமூகத்தையும் கடுகளவேணும் முன்னேற்றுவீர்கள் எனக்கூறி இச்சந்தர்ப்பத்தைத் தந்த ஆசிரியர் குழுவுக்கு நன்றியைக் கூறி எனது ஆக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**லியோனிஸ் டயஸ்**

# உறவுகள் மேம்பட...

உன்னை நீயே பெரியவனாக்காதே
பலனற்ற வார்த்தைகளைப் பேசாதே
மற்றவருக்கு விட்டுக்கொடுக்க மறுக்காதே
சகிப்புத் தன்மையை வளர்த்துக்கொள்ளத் தயங்காதே
உன் செயலே, உன் முடிவே சரியென வாதாடாதே
தாழ்வு மனப்பான்மை பாராட்டாதே
உண்மை, பொய் எதுவென அறியா விடயத்தைப் புறங்கூறாதே
ஏனையோரைத் தாழ்த்தி உன்னை உயர்த்தாதே
பேராசை கொள்ளாதே
எல்லாவற்றையும் எல்லாரிடத்திலும் சொல்லித்திரியாதே
உன் செவி கேட்பதைக் கேட்டவுடன் நம்பாதே
உன் கருத்தில் உடும்புப்பிடியாக நிற்காதே
மற்றவர் கருத்துக்கள், செயல்களைத் தவறான பார்வையில் நோக்காதே
அன்பு வார்த்தை பேசவும், புன்னகை பூக்கவும் தவறாதே
பேச்சிலும், நடத்தையிலும் பண்பற்ற வார்த்தைக்கு இடம் கொடாதே
மற்றவருக்கு மரியாதை காட்ட மறவாதே
இதமான சொல் கூறத்தாமதியாதே
மனம் திறந்து மற்றவருடன் பேசுவதைத் தாழ்வாய் எண்ணாதே
மற்றவருடன் மனத்தாங்கல் ஏற்படின் அவர்களை மன்னிக்க மறவாதே

**அ. யூட் லெயோன்**



## மூன்றின் மகிமை

| | |
|---|---|
| மும்மலை | – கொல்லி, நேரி, பொதிகம் |
| முந்நாடு | – சேர, சோழ, பாண்டியன் |
| முந்நதி | – பூர்ணா, வைகை, காவிரி |
| முப்பதி | – வஞ்சி, உறையூர், மதுரை |
| மும்முரசு | – மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு |
| முத்தமிழ் | – இயல், இசை, நாடகம் |
| முக்காலம் | – இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| முக்கொடி | – வில், புவி, மீனக்கொடிகள் |
| மும்மூர்த்தி | – பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் |
| முப்படை | – தானை, யானை, குதிரை |
| முப்பால் | – அறம், பொருள், இன்பம் |
| மும்மா | – கனவட்டம், கோரம், பாடலம் |
| முக்கனி | – மா, பலா, வாழை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுவர் உரிமைகள் ஒரு பார்வை...

மனிதன் தனது உரிமைகள் தொடர்பாக நவீன காலத்திலிருந்தே சிந்திக்கின்றான் ஆனால் பலம் உள்ளவனே அதை அனுபவிக்கிறான் என்பது நியதி ஆகிவிட்டது காலத்திற்குக் காலம் எமது நாட்டில் நிலவும் இன, சமூக புவியியல் ரீதியாக தொடர்ந்து நடைபெறுகின்ற ஆயுதப்போராட்டத்தின் காரணமாக சிறுவர்களின் உரிமைகள் சிதறடிக்கப்படுகின்றன காலத்திற்குக் காலம் உயிரிழந்தவர்கள் அல்லது அடிமைகள் அல்லது சிறுபான்மையினர் மாறுபட்ட கோணங்களில் தோற்றம் பெற்றதையும் உரிமைக்காகப் போராடியதையுமே சமூக வரலாறுகள் காட்டுகின்றன.

இன்றும் எம் நாட்டிலே இத்தகைய போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. உரிமைகள் எவை? யாருக்குத் தேவை? இவ்வுரிமைகள் மறுக்கப்பட்டக் காரணி என்ன? இக் கருத்துக்கள் மாறுபட்ட நோக்கிலேயே கையாளப்படுகின்றன குடும்ப அலகைப் பயன்படுத்துவதன்ஊடாக சிறுவர் உரிமைகள் கையாளக் கூடியதாக இருக்கும் சிறுவர் பெற்றோர், பெரியோருடைய அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியாமை சமூக ஒழுக்க விழுமியங்களுக்கு முரணானதாகவே கருதப்படுகின்றது. இந்த நிலைப்பாடு நியாயமாகக் கருதிய வடிவில் சமூக மாற்றங்களுக்கு நெகிழாமல் கையாளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் சிறுவர் உரிமையானது சமூகமாற்றம் போன்ற கருவிலேயே கையாளப்படுகின்றது.

20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்பம், கைத்தொழில் வளர்ச்சியினால் தனிநபர் வருமானம் அதிகரித்ததினால் குடும்ப, சமூக அரசியல் விடயங்களில் தனிநபர் சுதந்திரம் அடிப்படை மனித உரிமை என்பன முதன்மை பெறலாயிற்று. 1946 டிசம்பர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராம் திகதி சிறுவர்களுக்குஅபயம் அளிப்பதற்காக (UNICEF) யுனிசெவ் எனும் ஐக்கிய நாடுகள் சிறுவர் கல்வி நிதியம் தோற்றுவிக்கப்பட்டது. போர் அழிவுகளைப் புணரமைப்பதையும், சிறுவர்கள் தகுந்த முறையில் பாதுகாப்புப் பெறுவதை உறுதிப்படுத்துவதையும் யுனிசெவ் நோக்கமாகக் கொண்டிருந்தது. சிறுவர் உரிமைகள் உலகில் வாழும் 18 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் ஏற்புடையதாகும் உலகில் வாழும் சிறுவர்கள் அனைவருக்கும் இவ்வுரிமைகள் சமனாக அளிக்கப்படவேண்டிய தொன்றாகும். ஆனால் சிறுவர் உரிமைகளுக்கு யாழ்ப்பாண சமூகக் கட்டமைப்பில் ஒவ்வாத தன்மைகள் காணப்படுகின்றன. உண்மையில் சமூகக் கட்டமைப்பு குடும்பக் கட்டமைப்பு இடைவினைப் படுதலில் மாற்றத்தைக் கொண்டிருந்தாலும் கருதியல் அடிப்படையில் சமூகக் கட்டமைப்பு மாற்றத்தை உள்வாங்கவில்லை.

யாழ்ப்பாணச் சமூகப் பின்னணியில் பார்க்கும் பொழுது ஐரோப்பியரின் நான்கு நூற்றாண்டுக் கால ஆட்சியின் பின்னரும் கடந்த மூன்று தசாப்த இன முரண்பாட்டு யுத்தத்தின் பின்னரும் அல்லது யுத்தத்தினால் ஏற்பட்ட பாரிய வெளிநாட்டுப் புலப்பெயர்வின் பின்னரும் குடும்பம் பற்றிய கருதியல் கோட்பாடுகளில் தத்துவங்கள் ஏற்கப்பட்வில்லை. அதாவது கணவன் - மனைவி உறவில், பெற்றோர் - பிள்ளைகள் உறவில், சிறுவர் அணுகு முறையில் கருதியல் கிளையில் மாற்றங்கள் ஏற்படவில்லை சிறுவர் உரிமைகள் பிரச்சாரங்கள் குடும்பம் பற்றிய இறுக்கமான கருதியல் கொள்கைகளைக் கொண்ட சமூகக் கட்டமைப்பில் முரண் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அதாவது அன்பான தியாகத்துடன் முதல் நிலைப்படுத்தி கையாண்ட சிறுவர் விடயங்கள் சிறுவர்களால் உரிமையாககோரப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டிய கட்டாயத்திற்குட்படுகின்றன. சிறுவர் உரிமை மனித மேலான விழுமியம்தான் ஆனால் குடும்பக் கோயில்தான் இந்த விழுமியங்களின் பிறப்பிடம் காப்பிடம், அழிப்பிடம். எனவே ஐரோப்பிய அமெரிக்க ஐ.நா. சமயவாயங்கள் குடும்பம் பற்றிய விழிப்புணர்வை சிறுவர் பற்றிய கட்டுப்பாடு என்பவற்றை வலியுறுத்தும் மட்டும் நாம் காத்திருக்க வேண்டுமென்பதே நியதி

**அ. கென்சிங்டன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய இருதயங்கள்

## நாகரீக உலகின் பில்லி சூனியம்

இனி வரும்
காலங்களில்
செய்வினையால்
பழி
தீர்ப்பதற்கும்
கொலை
செய்வதற்கும்
காலடி
மண்ணும்
பிடி
சாம்பலும்
கொடியில் காயும்
பட்டும்
மயிரும்
மாந்திரியமும்
தேவையில்லை
கண்ணைப் பறிக்க
லேசர்
வைற்றஸும்
அங்கம்
செயல் இழக்க
கதிரியகக
ரிமோட் கொன்ரோல்
இவை
நவீன கால
பில்லி சூனியம்
நாகரிக உலகின்
செய்வினைகள்

## யார் நிர்வாணி

ஒருவனை
ஒருவன்
ஏற்றுக் கொள்ளாமல்
இருக்கும் வரை
எனக்கு
அவனும்
அவனுக்கு
நானும்
எல்லா
விதத்திலும்
இருவரும்
நிர்வாணியே
கடவுள்
முன்னிலையில்



## மன அலை

அழகு
உள்ள
எந்தப்
பெண்ணையும்
சகோதர
உறவு
கொள்ள
என்
உணர்வுகள்
மறுக்கின்றன;
அழகில்லாதவள்
என்
மனைவியாக
இருப்பதாலோ?

யே. பிரபா

நன்றி : கலைமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2000 ஆம் ஆண்டு அங்கத்தவர்**



**2006 ஆம் ஆண்டு அங்கத்தவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எயிட்ஸ்

இன்றைய நவீன உலகில் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சத்தில் மனிதன் உலகையே தன் கைக்குள் அடக்கி விட்டான் தன்னால் எல்லாம் இயலும் என்ற ஆணவத்தின் உச்சியை அடைந்து கொண்டிருக்கும் மனிதன் ஒரு சிறு கிருமிக்கு மட்டும் அஞ்சி ஒடுங்குகிறான் அக்கிருமி வேறுயாரமில்லை எச்.ஐ.வி (Hiv) யாகும் அதனால் ஏற்படும் எயிட்ஸ் எனும் கொடிய அரக்கனாகும் அணு ஆயுதயுத்தம், பூமி அதிர்ச்சி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி போன்ற கேடுகளைப் போலவே எயிட்ஸ் நோயும் அதனால் ஏற்படும் மரணமும் ஆகும் இன்றைய உலகில் 42 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்கு தொற்றி அவர்களின் உயிரை நாளாந்தம் குடித்தவண்ணம் உள்ளது இந்நிலையில் இந்நோயைப் பற்றி சற்று உற்று நோக்குவோம்.

### எய்ட்ஸ் நோயும் அதன் காரணிகளும்

எயிட்ஸ் என்றால் என்ன? அதன் வரலாறு யாது? அது எவ்வகையில் பரவுகின்றது என்பதை நோக்குவோம் எயிட்ஸ் என்பது "மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் பெறப்படும் பல்வேறு நோய்களின் கூட்டு" என்று குறிப்பிடலாம் இதன் ஆங்கிப்பதம்

A – Acguired – வெளியிலிருந்து பெறக்கூடிய
(பரம்பரையாக வருவதல்ல)
I – Immune – நோய் எதிர்ப்புச்சக்தி
D – Deficiency – குறைக்கப்பட்ட (குறைவுள்ள)
S – Syndrome – பல நோய்களின் அறிகுறிகள் சேர்ந்து தோற்றமளிக்கும். எயிட்ஸ் நோய்க்குரிய காரணி நுண்ணங்கிகளில் ஒன்றாக ஒருவகை வைரசு ஆகும் இதனை Hiv என அழைப்பர். Hiv என்பது "மனித நீர்பீடன சக்தியை குறைக்கும் வைரசு" எனப்படும் (H – Immane Deficiency, V. virus) ஆகும் இது நமது உடலில் உள்ள தற்பாதுகாப்புப்படையை அலலது நோய் எதிர்ப்பு சக்திகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனப்படுத்தி அழிக்கும் ஆபத்தான கிருமி எச்.ஐ.வி ஆனாது மனிதனது குருதித் தொகுதியை அடைந்து அங்கு நிணநீர் குழியங்களிலுள்ள "T4" வகையான கலங்களை அழிப்பதோடு தானும் பெருக்க மடைகின்றது Hiv வரலாற்றை சற்று நோக்கினால், 1981ஆம் ஆண்டு அமெரிக்க விமானச் சிப்பந்தி ஒருவரில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கிருமியை முதன் முதலில் இரத்தத்திலிருந்து பிரித்தவர் டாக்டர் ல்யுக் மொன்டானியா (Dr Luo montaginer) என்ற பிரெஞ்சு அறிவியலாளர் இதற்கு இவர் Lymphadenopathy Assouated Virus Lav என்ற பெயரைக் கொடுத்தார் 1984 ஆம் அண்டு அமெரிக்க அறிவியலாளர் டாக்கர் ராபர்ட்கேலோ (Dr. Robert Gallo) இரத்தத்திலிருந்து பிரித்தெடுத்த கிருமிக்கு Human T. Cell Lymphotrophlc Virud III (Htlv – III) என்றபெயரைக் கொடுத்தார் Dr. ல்யுக் மொண்டானியர் தனது தொடர்முயற்சியால் எயிட்ஸை உருவாக்குவது எச்.ஐ.வி என்று ஊர்ஜிதம் செய்தார் 1987இல் மற்றொரு பிரெஞ்சு அறிவியலாளர் இன்னொரு கிருமியும் எய்ட்ஸை உருவாக்க வல்லது என்று நிருபித்தார். முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. எச்.ஐ.வி -I (Hiv-I) என்றும் இரண்டவதாக கண்டுபிடிக்கப்பட்டது எச்.ஐ.வி –II (Hiv – II) என்றம் பெயர் கொடுத்தனர் இதற்குள்ளமுக்கிய வித்தியாசம் எச்.ஐ.வி – I வலுவுள்ளதாகவும், எச்.ஐ.வி –II சற்று வலுக்குறைந்ததாகவும் இருப்பதே ஆகும். மேலும் 1983இல் குரங்குகளுக்கும் எயிட்ஸ் நோய் இருக்கிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு காரணகர்த்தா எஸ்.ஐ.வி. - 40 (Siv - 40) (Sidmian Immune Deticincy Virus – 40) என்ற கிருமி தான் என்று உறுதியும் செய்யப்பட்டது சிலர் Hiv க்கும் Siv – 40 இதற்கும் இடையே நிறைய தொடர்பு ஒற்றுமை இருப்பதாக பேசத்துவங்கினர் ஆனால் அண்மையில் வெளியிடப்பட்ட உலகசுகாதார நிறுவன ஆராய்ச்சின் முடிவின் படி எச்.ஐ.வி கிருமிகள் நாற்பது ஆண்டுகளுக்குள்தான் உருவாகியிரக்கவேண்டும். காலங்கலாமாக குரங்குகளைத்தாக்கும் Siv – 40 வைரஸ்லிருந்து Hiv தோன்றியிருக்க நிச்சயம் வாய்ப்பு இல்லை "என்று உறுதியாக தெரிவித்தது. அடுத்ததாக எயிட்ஸ் நோய்க்கு காரணிகளாய் அமைவதை பார்கின்ற பொழுது Hiv தொற்றக்குள்ளானவருடைய நோய் எதிர்ப்புசக்தி மிக இழிவான நிலையை அடையும்போது (80 -85% அல் குறையும்போது) நோய் உருவாகின்றது.அப்போது பின்வரும் அறிகுறிகள் கணிசமாணவை தென்படும் உதாரணமாக காரணமின்றிய கடும் சோர்வு, சுரப்பிகள் வீங்குதல் (கழுத்து அங்குள் பகுதிகள்), காரணமின்றிய தொடர் வயிற்றோட்டம் (ஒரு கிழமைக்கு மேலாக நீடிக்கும்) தொடர்ச்சியான காய்ச்சலும் இரவில் கடுமையாக வியர்த்தலும் சடுதியான உடல் நிறை குறைவு (மாதாந்தம் 10% குறைவு) பசியின்மை, தலையிடி அசாதாரணமாக உதிர்தல், தோல் வியாதிகள், வாயைச் சூழ புண்கள், இளஞ்சிவப்பு பொக்குளங்கள் என்பனதோன்றும் கருநிற புள்ளிகள் ஆங்காங்கே காணப்படும் இவைகள் Hiv கிருமியால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை உறுதிசெய்கின்றன. இவ் Hiv நான்கு வகையான வழிகளில் எமது உடலின் குருதித்தொகுதியை சென்றடைந்து பெருக்கத்திற்குள்ளாகின்றது.

1. HIV தொற்றுள்ளவருடனான பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்
2. HIV பரிசோதிக்கப்படாத குருதிமாற்றீடு
3. தொற்று நீக்கப்படாத மருத்துவ உபகரணப்பாவவனை
4. HIV தொற்றுள்ள தாயிடமிருந்து குழந்தைக்கு செல்லல் இவ்வாறான வழிகளின் மூலம் Hiv கிருமிகள் இன்னொருவரை அடைந்து மற்றவருக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. Hiv மேற்கூறிய தொற்றும் வழிகளைத்தவிர சாதாரணமாக தொடர்புகளால் உதாரணமாக சாதாரண முத்தமிடல் கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல், சாப்பிடும், குடிக்கும் பாத்திரங்களை பாவித்தல், நுளம்பு மற்றும் பூச்சிகடிகளினால், நீச்சல் தடாகம், குளம், ஆறு, கடல் போன்றவற்றில் குளித்தல், மலசல கூடங்களை பாவித்தல், இருமுதல், தும்முதல் மூலம், ஆடைகளை மாற்றிபாவித்தல் ஒரே அலுவலகத்தில் பணியாற்றல், நண்பர்களாய் இருத்தல் போன்றவற்றால் தொற்றுவதில்லை Hiv தொற்றை உறுதிசெய்ய இருவகையான பரிசோதனைகள் கையாயப்படுகின்றன அதாவது முதலாவதாக "எலிஸ்ஸா பரிசோதனை (Elisa Test) இரண்டாவதாக "வெஸ்டன் பளாட்பரிசோதனை (Western Plot Test) Hiv கிருமி உடலுக்குள் நுழைந்து 6 -8 வாரங்கள் வரை எந்த பரிசோதனையாலும் கண்பிடிக்கமுடியாது சிலருக்கு 6 மாதங்களுக்கு பிறகுதான் கண்டு பிடிக்கமுடியும் இந்தக்காலத்தை "Windon Perod" என்று அழைக்கின்றார்கள்.

## புது யுகத்திற்கு எயிட்ஸ் ஒரு சவால்

எயிட்ஸ், தனிநபர்களையும், புகழ்ச்சியின் உச்சியை அடைந்தவர்களையும் கோடீஸ்வரர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஏன் முழுசமுதாயத்தையுமே பாதித்துவருகின்றது இவற்றிற்கு உதாரணங்களாக அமெரிக்கத்திரைப்பட நடிகர் "ராஸ்ஹட்சன்" துள்ளிசைமாஸ்டப்ரெடி, மாஜிக் ஜான்சன் போன்றவர்களின் மரணம் இந்நோய் பரவி எம்வருங்கால சொத்துக்களான இளைய சமுதாயத்தை அழுத்திக்கொண்டிருக்கிறது புதுயகத்திற்கு ஏற்படும் சவாலாக.

1. அதிகரிக்கும் அனாதைகள்

கி.பி. 2000இல் அமெரிக்காவில் மட்டும் எண்பதாயிரத்துக்கும் அதிகமான குழந்தைகள் அனாதைகளாகிவிட்டார்கள் இந்தக் குழந்தைகளின் பெற்றோர்களில் ஒருவராலும் தாய் தந்தை இருவருமே எயிட்ஸ் நோயினால் இறந்து விட்டதே இதற்குக் காரணம் இவ்வாறான கொடூரநிலை எம்யுகத்தை பெரிதாகப் பாதிக்கின்றது.

2. வறுமைக்கோடு வளர்கிறது

அனாதைக் குழந்தைகளில் ¾ பங்கினர் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பணத்தை முதன்மைப்படுத்தும் இவ்வுலகில் ஏழைகள் தங்கள் சமூக அந்தஸ்தை ஏற்கனவே இழந்தவர்கள் இந்நோய் இவர்களது அந்தஸ்தை மேலும் சீர்குலையச் செய்கிறது இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வறுமை என்னும் நிழல் இவர்களைச் சூழும் நிலை ஏற்படுகின்றது இந்நிலை இவர்களை அழுத்தும்போது போதை எனும் மாயப்போர்வையைப் போற்றி அதில் குளிர்காய்ந்து வறுமையின் நிலையை மறக்க முயல்கிறார்கள். போதையின் அடிமையால் திருட்டு, கொலை, கற்பழிப்பு போன்ற வன்செயல்களால் எமம் யுகத்தை ஆளாக்குகின்றார்கள்.

3. பொருளாதார வீழ்ச்சி

இந்நோய் உலகில் பொருளாதாரத்தை ஊடுருவத்தொடங்கிவிட்டது கொடுக்கிற கடனோ, உதவியோ நமது தேவைகளின் அடிப்படையில் இல்லை முதல் உலகநாடுகளின் ஆசையின் அடிப்படையில் சதிவலையின் அடிப்படையில் அமைகின்றன உதாரணமாக உலகவங்கி உதவிதொகையில் 33% எய்ட்ஸ்கல்வி, பாலியல்நோய்க்காக சிகிச்சை, 37% பாதுகாப்பான செக்ஸ் என்ற பெயரில் பிரச்சாரம், அணுறை உற்பத்தி, வியாபார விநியோகம் 30% இரத்த வங்கிகள் சுத்திகரிப்பு, பராமரிப்பு என்று செலவு செய்யப்படுகின்றது இவ்வாறாக இந்நோய் நாட்டின் பொருளாதாரத்தையும், வீட்டின் பொருளாதாரத்தையும் தாக்குகின்றது.

4. துன்புறும் பெண்கள்

Hiv இன் தாக்கத்தினால் இன்றைய பெண்கள் பல வழிகளில் துன்புறுகின்றார்கள் தனி ஆளாக Hiv இனால் பாதிக்கப்பட்டு நோயாளியாகத் துன்புறும் நிலை வயிற்றில் வளரும் குழந்தைகளும் Hiv கிருமியை கொடுத்துவிட்டு குழந்தைபடும் துன்பத்தை நினைத்து நினைத்தக் கவலை, குடும்பத்தில் Hiv ஏற்பட்டவருக்கு பணிவிடை செய்வதன் மூலம் ஏற்படும் சுமை இதனால் பெண்களின் விடுதலை மறுக்கப்படும் நிலை ஏற்படுகின்றது இவை புது யுகத்திற்கு ஓர் சவாலாக அமைகின்றது.

## எயிட்ஸிலிருந்து பாதுகாப்பு

ஒருவனுக்கு ஒருத்தி எனும் கட்டுப்பாட்டுடன் சீரான குடும்ப உறவை பேணுதல் தவறும் பட்சத்தில் ஆண், பெண் உறைகள் (condon) உரிய முறையில் அணிந்து பாதுகாப்பான பாலுறவில் ஈடுபடுதல், எமக்கொ எமது உறவினரக்கோ குருதி ஏற்றப்படும் சந்தர்ப்பதில் எற்படும் குருதி Hiv க்கான பரிசொதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல், மருந்தேற்றுவதற்கு புதிய ஊசிகளை அல்லது உரியமுறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்த அனுமதித்தல் தொற்றுள்ள தாய் கர்ப்பந்தரிக்காதிருத்தல் பாலியற் கல்வி வழங்குதல் இது மனிதனின் உடல் வளர்ச்சி அதன் ஆரோக்கியம் பாலியல் உறுப்புக்களைப்பற்றி அறிதல் அதன் பராமரிப்புப்பயன்கள் மேலும் பாலியல் பற்றிய அறிவு பிறரோடு குறிப்பாக மற்ற பாலினரோடு நட்பு கொள்வது அதன் தொடர்பாக உள்ள உளவியல் அறிவு அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைதல் எயிட்ஸ் பரவி வரும் சூழலில் கல்வியின் அவசியம் எல்லோராலும் உணரப்படவேண்டும் எய்ட்ஸ் நோயினின்று இளைய சமுதாயம் காக்கப்படவேண்டும் எய்ட்ஸ் நோய்க்கு எதிராக இளைஞர்கள் ஒன்றுபட்டு செயல்படவும் வேண்டும் இதன் மூலம் எயிட்ஸில் இருந்து எமது சமுதாயத்தை பாதுகாக்கலாம் இவை எமது யுகத்தில் எய்ட்ஸினால் ஏற்பட்டுள்ள சவால்களை மேற்கொள்ள முடியும்.

**கெ. யோகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போதைவஸ்து

# இன்றைய சமுதாயத்தில் போதைவஸ்தின் ஆக்கிரமிப்பும், அதிலிருந்து விடுபட வழிகளும்.

**ஒன்றுபடுங்கள்**

"கழன்று விடாமல் கைகோர்த்து நில்லுங்கள் உங்கள் உள்ளங்கையின் உஸ்ணத்திலேயே கஞ்சக்காடு பற்றி எரியட்டும்....."

வைரமுத்து – (சிகரங்களை நோக்கி)

ஒரு கொலை அல்லது தற்கொலை அல்லது கற்பழிப்பு என பழக்கப்பட்டுப்போன வார்த்தைகள் அவன் அல்லது அவள் எனத் தெரிந்த நபர்கள் இன்றைய சமூகத்தின் ஒவ்வொருபடியிலும் ஒவ்வொரு சமூகப் பிரச்சனைகள் நாடு அரசியல் பொருளாதாரம் போன்ற துறைகளில் சிக்கல்களைக் கண்டு கொண்டிருக்க சமூகப் பிரச்சனைகளும் மக்களை மக்கள் கூட்டம் அழிக்கும் பெருங் காரணியாக உருவெடுத்துள்ளது.

குறிப்பாக இவற்றில் போதைப்பொருள் பரம்பலும் பாவனையும் அதன் பின் விளைவுகளும் முக்கியமானவை. 3ஆம் உலக நாடுகளில் மிக முக்கிய பிரச்சனைகளில் ஒன்றாக இது காணப்படுகின்றது. இன்றைய நவீன விஞ்ஞான யுகத்தில் புதிய மருத்துவக் கண்டுபிடிப்புகளும் அடிப்படையாய் காணப்படும் தனிநபர் பிரச்சனைகளும் போதைப்பொருள் பாவனைக்கான ஏதுக்களை தூண்டுகின்றது. ஒவ்வொரு நாடும் மருத்துவத்திற்காக மட்டுமன்றி வர்த்தகத்திற்காகவும் போதைப்பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. உதாரணமாக அபின் உற்பத்தியில் இந்தியாவின் பஞ்சாப், உத்திரபிரதேச மாநிலங்கள் ஈடுபடல் ஆயுதப் பரிவர்த்தனையைப் போலவே சர்வதேச ரீதியில் உள்ள சந்தையில் போதைப்பொருட்கள் பெரும் இடத்தைப் பிடித்தக்கொண்டிருக்கின்றன. வெளிப்படையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினது உற்பத்தி (மது) தவிர மறைமுகமான தனிநபர்களின் உற்பத்தியும் போதைப் பொருட்களின் பரம்பலில் இடம் பெறுகின்றது.

மருத்துவ உலகில் போதைப்பொருட்களை உட்கொள்பவர்கள் நோயாளிகள் அதாவது போதைப்பொருளுக்கு அடிமையகுடதல் என அழைக்கின்றனர் தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது அதிலிருந்து விடுப அல்லது இன்பத்தைப் பெற தெரிந்தும் தெரியாமலும் பலர் இதனை நாடுகின்றனர். குறிப்பாக அடிமையானவர்களாக மாணவர்கள், இளம் சந்ததியினர், வேலையற்ற இளைஞர்கள் ஆகியோரைக்குறிப்பிடலாம்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் குழிவிழுந்த சிவந்த கண்களையும், கைகால் நடுக்கத்தையும், அளவு கடந்த வியர்வையையும் தடுமாறும் வார்த்தைகளையும், அளவுக்கு மீறிய சோர்வுடனும் நாளுக்கு நாள் தம்மை இழந்து மரணத்தை நோக்கிச் செல்லுவார்கள் என மருத்துவர்கள் கூறுகின்றனர். சிலர் போதைப் பொருட்களை தாம் பாவிப்பதோடு மட்டுமல்லாது அதனை மற்றவர் பாவிக்கும் படியும் தூண்டுகின்றனர் மது அருந்தும் ஒருவர் தனது நிலையிலிருந்து தடுமாறி சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுவதனால் அவரது கல்வி சமூக அந்தஸ்து பாதிக்கப்பட்டு சுயகௌரவம் கேள்விக்குறியாக மாறுகின்றது இதனால் அம் மனிதனின் குடும்பம் பாதிக்கப்படுகின்றது இதன் விளைவு சில வேளைகளில் ஒரு சமூகத்தின் பாதிப்பாகவே மாறுகின்றது.

எனவே நாம் இன்றைய சமுதாயத்தில் போதைவஸ்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து அதிலிருந்து விடுபட வழிகளை நாடவேண்டும் மிக முக்கியமாக ஒவ்வொரு அரசாங்கமும் போதைப்பொருள் பாவனை தடைச்சட்டங்களை ஏற்படுத்தி கடுமையான தண்டனை விசாரணைகள் மூலம் போதைப்பொருளையும் அதன் பாவனையாளர் களையும் மட்டுப்படுத்தவேண்டும் கிராமங்கள், நகரங்கள் தோறும் போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் தீய விளைவுகளை பற்றி அறிவுறுத்த அடிக்கடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், மருத்துவமுகாம்களை ஏற்படுத்தவேண்டும்.

மேலும் மக்களும் மக்கள் சமுதாயமும் ஒற்றுமையாக இருந்தால் இந்தப் போதைப்பொருள் பாவனை அழிவிலிருந்து மக்களை முற்றாக விடுவித்து விடலாம் போதைப் பாவனையில் ஈடுபடுபவர்களை கேலி செய்யாது அவர்களுக்கு மன அழுத்தம் கொடுக்காது அன்பான முறையில் அறிவுரை கூறி தீயவழி செல்லும் குழுக்களை திருத்தி நமது சமூகத்தை சிறந்த ஆரோக்கியமான சமூகமாக முன் கொண்டுசெல்ல நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

**சதீஸ்குமார்**

## படைப்பின் ரணமே

இக்கவித்துளி படைக்கும் முன் - நான்
ஒரு நிமிஷம் இயற்கையில் ஐக்கியம்
ஆஹா எவ்வளவு இனிமை
காதல் நேசம் பாசம் அனைத்தும்
இதன் படிக்கட்டுகள் போலுள்ளதே
இரவோ பகலோ மழையோ வெயிலோ
ஒரு கணம் தனித்திரு இயற்கையை புசித்தபடி
என்ன இனிமை தாய்மடித்தாலாட்டு ஞாபகம்
தந்தையின் தோள் சாய்ந்த ஞாபகம்
காதலி மடிசாய்ந்த ஞாபகம்
ஆஹா என்னவொரு பேரின்பம்
இறைவா உன் அழகை நான் கண்டேன்
இவ் வழகிய இயற்கையிலே
என்னையே நான் மறந்தேன் அதன் அழகினிலே

## இளமையின் இனிமை

இளமை எனும் தொட்டினிலே
தவழ்ந்தவன் தான் மனிதனடா
இளமைக்குள் இனிமையுண்டு
அதைத்தேடிடு புதுத்துணிவு கொண்டு
இளமையிலே பாசம் வரும்
புதிதாக நட்பு வரும்
புரிந்துணர்வுக் காதல் வரும்
புரியாது மோதல் வரும்
வருவதெல்லாம் நினைவுகளாய்
வருங்கால முதுமையிலே
இளமைக்கு நிகரான பருவமில்லை
இளமையில் நினைக்காது நினைவு இல்லை
இளமையில் அடையாத உணர்வு இல்லை
இளமையை உணராது முதுமை இல்லை

**அன்ரனி யூட்லெயோன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கணிப்பீடு**

# குருநகர்
# பாடும்மீன் விளையாட்டுக்கழகம்

1. யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள கிராமத்தின் நாமம் கரையூர் என்னும் பெயரைக்கொண்டது இக்கிராமத்தின் மூலவளம் மீன் பிடித்தொழிலாகும் இத்தொழில் வளத்தினால் இக்கிராம இளைஞர்களுக்கு பொழுதுபோக்கு நேரம் மிக அரிதாகன சூழ்நிலையே இருந்து வந்துள்ளது. இந்நிலையிலும் கூட இக்கிராம இளைஞர்கள் கலை, கலாச்சாரம் விளையாட்டுத்துறைகளில் பல சிறந்தவர்கள் இலைமறை காய்களாக இருந்துள்ளார்கள். இந்நிலையில் கரையூர் என்னும் பெயர் குருநகர் என்னும் நாமத்துடன் மிளிரத்தொடங்கியது.

2. இந்நிலையில் எமது ஒரு சில இளைஞர்கள் ஒன்று கூடி எமது கிராமத்தின் பெயர் பிரபல்யமடைந்து பலராலும் புகழப்படவேண்டும் என்ற சிந்தனையினால் உந்தப்பட்டு சகல விளையாட்டுத்துறையிலும் எமது இளைஞர்களை ஊக்குவித்து விளையாட்டுத்துறை மூலமாக, அதாவது முதலில் உதைப்பந்தாட்டம் மூலமாக குருநகர் என்னும் நாமத்தை மிளிர வைக்கவேண்டும் என்ற உறுதியான சிந்தனையுடன் உதைப்பந்தாட்டக் கழகத்தை உருவாக்கி உதைபந்தாட்டத்தில் முன்னேற்றமடைந்துவரும் காலப்போக்கில் ஏனைய விளையாட்டுக்களிலும் முன்னேறுவோம் என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் ஒரு சில இளைஞர்களின் அயராத முயற்சியின் பலனாக 14.10.1963 ஆம் ஆண்டிலே குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் உருவாக்கப்பட்டதாக அறிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இதன் பிரகாரம் பாடும்மீன் விளையாட்டுக்கழகமானது 1963, 1964ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பல தோல்விகளைச் சந்தித்தும் பின்வாங்காமல் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்திலே இணைந்து பலம் வாய்ந்த அணிகளுடன் மோதுவதற்கும் தயக்கம் என்பதே பாடும்மீன் கழகத்தின் அகராதியில் இருக்கக்கூடாது என்ற முழுப்பலத்துடன் மோதி சில அணிகளை வெற்றியீட்டியும், சில அணிகளிடம் தோல்வியைத்தழுவியும், சில பலம் வாய்ந்த அணிகளுடன் வெற்றி தோல்வி இல்லாமல் சமநிலையிலும் இருந்து வந்துள்ளது. இப்படியான நிலையிலும் Bபிரிவிலேயே பாடும்மீன் கழகம் பதிவு செய்யப்பட்டிருந்தது Bபிரிவில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றால்தான் Aபிரிவிற்கு தரம் உயர்த்தப்படும் என்ற விதிமுறை உள்ளது.

4. இந்த விதிமுறைக்கு அமைவாக எமது பாடும்மீன் கழகம் Aபிரிவிற்கு முன்னேறவேண்டும் என்ற ஒரு வெறியினால் உந்தப்பட்டு பயிற்சிபெற மைதானமே இல்லாத நிலையிலும் மைதானம் இருக்கும் இடங்களைத் தேடிச்சென்று மைதான உரிமையாளர்களினால் துரத்தப்பட்ட நிலையிலும் மனம்தளராமல் அரைகுறை பயிற்சி பெற்ற நிலையிலும் 1965ஆம் ஆண்டு Bபிரிவில் சகல அணிகளையும் தோற்கடித்து வெற்றியீட்டி இறுதியாட்டத்தில் வைக்கிங்ஸ் அணியை 5-2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டி சாம்பியன் பட்டத்தை பெற்று Aபிரிவிற்கு தரம் உயர்த்தப்பட்டது.

5. அன்றிலிருந்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்ட வரலாற்றிலேயே யாழ்மாவட்டத்தில் மட்டுமில்லாது அகில இலங்கை ரீதியாகவும் பலம் வாய்ந்த கழகமாக மிளிரத்தொடங்கியது பல வெற்றிச் சாதனைகளைப் படைத்து வந்துள்ளது. இது மட்டுமல்லாது இக்கழக முன்னாள் வீரர்கள் பலர் சர்வதேச நாடுகளான பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு தொழில் வாய்ப்பை தேடிச்சென்றவர்கள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் குருநகர் பாடும்மீன் கழகத்தின் கிளைக்கழகங்களாக பாடும்மீன் என்ற நாமத்தில் கழகங்களை உருவாக்கி போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டிக் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பெயரை நிலைநிறுத்தியுள்ளார்கள்.

6. இப்படிப் பலம் வாய்ந்த குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பெயரையும், சாதனைகளையும் அறிந்த நானும் ஒருவித உணர்ச்சியினால் உந்தப்பட்டு இப்படியான கழகத்தில் உறுப்பினராக இணைந்து பயிற்சிபெற்று எனது திறமைகளை வெளிக்கொணர்ந்து எனது தாய் மண்ணுக்கு பெருமைதேட எனக்கும் ஓர் வாய்ப்பு கிடைக்காதா என உந்தப்பபட்டேன் இப்படியானகால கட்டத்திலேயே யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் 13வயதுக்குட்பட்டோருக்கான ஓர் போட்டியை அறிமுகம் செய்தது.

7. எனது உணர்ச்சியையும், ஆர்வத்தையும் நிறைவேற்றக்கிடைத்த சந்தர்ப்பமாக கருதி பாடும்மீன் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து 13வயதுக்குட்பட்ட பிரிவில் வீரராகக்கலந்து விளையாடிப் பல அணிகளை வெற்றியீட்டிச் சாம்பியனாக எமது பாடும்மீன் கழகம் தெரிவு செய்யப்பட்டது இந்நிலையைத் தொடர்ந்து எமது விளையாட்டுத்துறை சகாப்தம் பரிமாணிக்கத் தொடங்கியது.

8. இருந்தாலும் எமக்கு திருப்தியளிக்க வில்லை ஏனெனில் மிகவும் சிறியவராக இருந்ததினால் சிறிதுகாலம் விளையாட்டுத் துறையில் முன்னேறமுடியாத சூழ்நிலை இருந்துவந்தது. இருப்பினும் எனது ஆர்வம் குறையவில்லை சிறிது கால இடைவெளிக்குப் பின் மீண்டும் பாடும்மீன் கழக வீரராக பரிமாணிக்கத் தொடங்கினேன் இன்றுவரை பாடும்மீன் கழக வீரராகப் பல போட்டிகளில் தோல்வியைத்தழுவியும், பல போட்டிகளில் வெற்றியீட்டியும் வந்துள்ளோம்.

9. 2005ஆம் ஆண்டில் பல போட்டிகளில் வெற்றியீட்டியும் சில போட்டிகளில் தோல்வியும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்துள்ளோம் இருப்பினும் யாழ்ப்பாண லீக் நடாத்திய தினக்குரல் உதைபந்தாட்டப் போட்டியில் பாடும்மீன் கழக அணித்தலைவராக கலந்துகொண்டு சாம்பியன் பட்டத்தை பெற்றுள்ளோம். அதுவுமல்லாமல் யாழ்மாவட்ட ரீதியான தினக்குரல் போட்டியிலும் இறுதியாட்டத்தில் கலந்துகொள்ளும் தகுதியையும் பெற்றுள்ளோம் இதுவுமல்லாமல் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் ஆரம்பகாலம் முதல் இன்று வரையிலும் வரலாறும், சாதனையும் என்னும் நூல் மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**ப. பிரியானந்தன்**

காதோடு ஒரு அறைகூவல்,
இளைஞனே எழுந்து வா
உழுத்துப் போன
நம் சமூகத்தினை நகர்த்த
கைகளை வடமாக்கி
இழுக்கத்
தொடங்குவோம்.





துன்பங்களும்
வேதனைகளும்
மனிதனைப்
பண்படுத்த
இறைவனால்
பயன்படுத்தும்
கருவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீர்கேடுகள்

## 21ஆம் நூற்றாண்டில் கலாசாரம்

இன்றைய 21ஆம் நூற்றாண்டிலே "கலாசாரம்" என்ற வார்த்தையை எவ்வாறு மதிக்கின்றோம் என நோக்கினால் எம் பண்டையவர்கள் பொக்கிஷமாக காப்பாற்றிவந்த கலாசச்சாரத்தினை இன்று சீர்கெட்ட நிலையில் காண்பது மிகவும் வருத்தத்திற்குரியது வேகமாக வளர்ந்து விஞ்ஞான யுகத்தால் எம் நாட்டு கலாச்சாரமானது சீர்கெட்டுள்ளதை எம்மால் காணக் கூடியதாக உள்ளது எனவே எம் பண்பாட்டு கலாச்சாரங்களை பேணிக்காக்கவேண்டியது மனிதராய் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கலாச்சாரமானது எமது நடை, உடை, பாவனை என்ற அடிப்படையில் பேணப்பட்டு வருகின்றது எமது நாட்டின் கலாச்சாரத்தினை உலகிலுள்ள அனைவரும் வியந்து கூறினா் 2ஆம் வத்திக்கான் சங்கம் கலாச்சாரமென்பதை கீழ்வருமாறு வரையறுக்கின்றது "கலாச்சாரமென்பது மனிதன் தன் ஆன்ம, உடல் சம்பந்தமான பல்வேறு சிறப்புக்களை பயன்படுத்தி வளர்ச்சியுறச் செய்யும் தன் அறிவாலும் உழைப்பாலும் அவனியை தன் அதிகாரத்தின் கீழ் கொணரவும் மேற்கொள்ளும் அனைத்தையும் கலாச்சாரம்" என்ற சொல் குறிக்கும்

எமது நாட்டில் பாரம்பரியமாக கட்டிக்காத்து வரும் கலாச்சார விழுமியங்களை நோக்கினால் பெற்றோரை வணங்கி அவர்களுக்கு மரியாதை செய்தல், பயணங்கள் செய்ய ஆயத்தம் ஆகும்போது சமய கலாச்சார முறைகளை பின்பற்றுதல் வீட்டுப் பிராணிகளை நன்கு பாதுகாத்தல் வழிப்போக்கரின் நலன் கருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்குடங்களை வீதிநகரில் வைத்தல் விருந்தினரை உபசரித்தல் முதியவர்கள் முன்னிலையில் எழுந்து நிற்றல் நாட்டு பிரஜைகளை சகோதர சகோதரிகளாக மதித்தல் புனிதஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தல் என்பவை எம் நாட்டின் கலாச்சார விழுமியங்களாகும்.

இன்றைய மனிதனது வாழ்க்கை முறைகளையும் சமூதாயத்தையும் கலாசாரத்தையும் உற்று நோக்கினால் அது எவ்வளவிற்கு மாற்றமடைந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது இன்று எம் நாட்டில் அழிந்து வரும் கலாசார விழுமியங்களாக அரைகுறையான ஆடை அணிதல் பணக்காரர், ஏழைகளை பற்றி கவணியாதிருத்தல், பிழை செய்தல் அப்பிளையினை விசாரனையின்போது வெளிப்படுத்தாதிருத்தல் மனித மனங்களை சிதறடிக்கும் பகிடி வகைகள் வாந்திகளை பரப்புதல் நிஜாயமான தீர்ப்புகள் வழங்கப்படுவதில்லை, சிறுவர் துஷ்பிரையோகம், இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாதல் என்பவற்றை குறிப்பிடலாம்.

மேற்குறிக்கப்பட்ட கலாசார மதிப்பீடுகள் அழிவதால் நம் வாழ்வு சீரழிக்கப்பட்டு மனிதத்துவம் அழிக்கப்படுகின்றது இன்று பணத்திற்கும் பதவிக்கும் பெயருக்கும் நவநாகரீகங்களுக்கும் மனிதத்தன்மை கீழ்ப்படுத்தப்பட்டுள்ளது.

மனிதரிடையே காணப்படுகின்ற கருத்தற்ற எண்ணங்களில் இருந்து அவர்களை மீட்டுக்கொள்ள பொருளாதார அரசியல் காரணிகள் மூலம் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தீர்மானம் எடுத்து அதனை உயர்நிலைப்படுத்தலும் நிகழ்காலத்தில் வாழும் எம்மவர் கடமையாகும் மனிதனை மனிதனாக மதித்து குலம், கோத்திரம், ஆண், பெண் வேறுபாடு சாதி, மத வேறுபாடின்றி வாழவேண்டும் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்திற்கு மனித உரிமையை மேம்படுத்துவதே சிறந்ததாகும் கலாசார மதிப்பீடுகள் செயல்படுத்தபடாவிடில் பாழடைந்த வீழ்ச்சியற்ற சமுதாயம் ஒன்றே உருவாகும் ஆகவே நாம் அனைவரும் ஒன்றுபட்டு பொது நலனுக்காக உழைத்து அதனுடாக கலாச்சார வழிமுறைகளை பின்பற்றும் நல்லதொரு சமுதாயத்தை கட்டி எழுப்ப அனைவரும் ஒன்றாக கை கொடுப்போம் "ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு"

**அ. வினூசியஸ்**



சேர், என்ர காதல் தேவதை கிணற்றுக்குள் விழுந்தால் நான் தூக்கலாமா?

ஆம் தூக்கலாம். வேண்டுமானால் பக்கத்து வீட்டு பையனின் உதவியையும் நாடு.
ஆனால்..................கவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்திப்பு

# அரங்கேற்றம் கண்ட இரு நாட்டியத் தாரகைகளைச் சந்தித்தபோது...

**1**

**கேள்வி :-** உங்களுடைய முழுப்பெயர் என்ன? உங்கள் சொந்த இடம் என்ன?
**பதில் :-** எனது பெயர் லூர்த்துநாதன் சுதர்சினி எனது சொந்த இடம் குருநகர் யாழ்ப்பாணம்

**கேள்வி :-** நீங்கள் படித்த பாடசாலை
**பதில் :-** யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

**கேள்வி :-** உங்களுடைய தற்போதைய கல்வி நிலை பற்றி கூறமுடியுமா?
**பதில் :-** தற்போது யாழ்.:.இராமநாதன் நுண்கலை கழக 1ஆம் வருடமாணவியாக உள்ளேன்

**கேள்வி :-** நீங்களும் நடன கலையை கற்க ஆரம்பித்த காலம் பற்றி கூறமுடியுமா?
**பதில் :-** நான் எனது நடனத்தை 7 வயதில் இருந்து அதாவது 13 வருடங்கள் இக்கலையை பயின்றுள்ளேன்.

**கேள்வி :-** உங்கள் வெற்றியில் பெற்றோரின் பங்கு எப்படி இருந்தது?
**பதில் :-** என்னுடைய ஆரம்பகாலத்திலிருந்து நான் இன் நிலைக்கு வரும் வரைக்கும் எனக்கு பக்கபலமாய் ஊன்றுகோலாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி** :- உங்களுடைய முழுப்பெயர் என்ன? உங்கள் சொந்த இடம் என்ன?
**பதில்** :- எனது பெயர் ஹார்த்து நாதன் சுதர்சினி எனது செந்த இடம் குருநகர் யாழ்ப்பாணம்

**கேள்வி** :- நீங்கள் படித்த பாடசாலை
**பதில்** :- யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

**கேள்வி** :- உங்களுடைய தற்போதைய கல்வி நிலை பற்றி கூறமுடியுமா?
**பதில்** :- தற்போது யாழ்.'.இராமநாதன் நுண்கலை கழக 1ஆம் வருடமாணவியாக உள்ளேன்

**கேள்வி** :- நீங்களும் நடன கலையை கற்க ஆரம்பித்த காலம் பற்றி கூறமுடியுமா?
**பதில்** :- நான் எனது நடனத்தை 7 வயதில் இருந்து அதாவது 13 வருடங்கள் இக்கலையை பயின்றுள்ளேன்.

**கேள்வி** :- உங்கள் வெற்றியில் பெற்றோரின் பங்கு எப்படி இருந்தது?
**பதில்** :- என்னுடைய ஆரம்பகாலத்திலிருந்து நான் இன் நிலைக்கு வரும் வரைக்கும் எனக்கு பக்கபலமாய் ஊன்றுகோலாய் அமைந்தவர்கள் பெற்றோர்கள் தான் இதற்கான ஆசையை எனக்கூட்டி என்னை ஊக்குவித்தவர்கள் என் பெற்றோர்கள் இப்போர் காலத்திலும் எந்த பொருளாதார சூழ்நிலையிலும் எனது வெற்றிக்கு அவர்கள் தான் மிகவும் உதவியாக இருந்தார்கள்

**கேள்வி** :- உலகில் நிறைய கலைகள் இருந்தாலும் நீங்கள் நடனக் கலையை மட்டும் உங்கள் தெரிவாக அமைந்ததன் காரணம் என்ன?
**பதில்** :- நாட்டிய கலைமூலம் உலகியலுக்கும் ஆன்மீகத்திற்கும் தொடர்பு உண்டு உலக அசைவுகள் ஒவ்வொன்றும் தான் நாட்டிய்மாக வெளிவருகின்றது இதில் ஆன்மீகம் வளர்க்கப்படுகின்றது இவ் நடனக்கலையை பயின்றதன் மூலமாக எனது ஆன்மீகம் வளர்த்துள்ளதையும் என்னால் உணர முடிகிறது இதனால் இக்கலை எனது தெரிவாக அமைந்தது.

**கேள்வி** :- உங்களின் குரு யார்?
**பதில்** :- இடம் பெயர்வுகள் காரணமாக நான் எனது கலையை 4 ஆசிரியர்களிடம் பயின்றேன் சிறுவயதில் நான் கற்றது நளாயினி இராசதுரை, திருமறை கலாமன்றம் ஊடாக கமலராணி, அகல்யா, அவர்களிடமும் பின்பு ஆனந்தஜோதி தர்ஷனன் ஆகியோரிடமும் கற்று கொண்டேன.

**கேள்வி** :- கல்வி கற்று அதில் கருத்தூன்ற இக்கலை துணையாக இருந்ததா இடையூறாக இருந்ததா?
**பதில்** :- மேலே குறிப்பிட்டது போல் இக்கலை மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கு பக்கபலமாக இருப்பதனால் ஞாபக சக்தியை வளர்ப்பதற்கு இதை துணையாக இருப்பதாக கருதுகின்றேன் ஆகையால் இதை கற்பதனால் கல்வியோடு என்னை வளர்த்து கொள்வதற்கு உதவியாக இருக்கின்றது ஆகவே ஒருபோதும் இது தடையாக இல்லை.

**கேள்வி** :- திறமைகளை வெளிக்கொணர நீங்கள் சந்தித்த மேடைகள் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்
**பதில்** :- மேடைகள் என்றால் நான் சிறுவயதில் இருந்து பாடசாலைகளில் எனக்கு வாய்ப்புக்கள் கிடைத்தது. ஆயினும் திறமைகள் முழுமையாக வெளிக்கொண்டு வர கிடைத்த காலங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து தந்த பெருமை திருமறை கலாமன்றத்திற்கே உரியது அது மட்டும் அல்லாமல் எமது ஊரில் நடைபெறும் விழாக்களிலும் எமது கலையரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளோம். அதுமட்டுமல்ல பிற நகரங்களிலும் நாடுகளிலும் எங்களது திறமைகளை வெளிக்கொனர்கின்றோம் ஆகையால் எமக்கு வெளிநாட்டிலும் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி** :- நீங்கள் மேற்கொண்ட கலைபயணங்கள் பற்றியும் குறிப்பாக வெளிநாடுகளிலும் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றி சொல்லுங்கள்?
**பதில்** :- 2001இல் சுவிஸ்லாந்தில் போர்ன் நகரில் சர்வதேச தமிழ் விழாவில் பங்கு பற்றினேன் அடுத்து 2003இல் ஐரோப்பாவில் 4 நாடுகளில் எங்கள் கலைப்பயணம் மேற்கொண்டோம் சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன் ஆகிய நாடுகளிலும் 2004இல் ஜேர்மன் செக்குடியரசு (யுக்கொஸ் சுலேவியா) ஒஸ்ரியா, பெல்ஜியம், லண்டன், இத்தாலி, கொலன்ட், பிரான்ஸ், கனடா, ஆகிய நாடுகளில் எமது பயணத்தை மேற்கொண்டோம் வெளிநாடுகளில் நாங்கள் பெற்ற அனுபவங்கள் வித்தியாசமாக இருந்தது.

**கேள்வி** :- உங்கள் வளர்ச்சயில் திருமறை கலாமன்றத்தின் பங்கு எப்படி இருந்தது தற்போது எப்படி இருக்கிறது.
**பதில்** :- நான் சிறுவயதிலிருந்தே பயின்று வந்தது திருமறைக் கலாமன்றம் என்னை வளர்த்ததும் திருமறை கலாமன்றம் என்று கூறுவதில் பெருமை அடைகிறேன் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளார் ஆவார் இவர் மூலமாகத்தான் கலைப்பயணங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் பெற்றுதரப்பட்டன வாழ்வியல் சம்பந்தமாகவும் ஆன்மீகம் சம்பந்தமாகவும் நடனக் கலையில் ஊடாட்டம் பற்றிய அறிவையும் அறிவுறுத்தல்களையும் எங்களுக்கு தருபவர் இவர்தான் பயணங்கள் மூலமாக எங்கள் திறனை வெளியுலகிற்கு காட்ட பாடுபட்டவர் இவர்தான் கல்விபயிலும் இடம்தான் ஆனாலும் இங்கு எங்களுக்கு ஏற்படும் கலைசம்மந்தமான பிரச்சனைகளில் இதைப்பற்றிய அறிவுரைகள் மூலமும் எங்களை ஊக்குவித்து தட்டிக்கொடுத்து வளர்த்த பெருமை கலாமன்றத்தையே சாரும்.

**கேள்வி** :- உங்களுடைய வெற்றிக்கு காரணகர்த்தாவாக யாரை கருதுகிறீர்
**பதில்** :- எனது வெற்றிக்கு காரணமாக ஒருவரை மட்டும் குறிப்பிடமுடியாது நிச்சையமாக எனது பெற்றோர், கலாநிதி நீ.மரியசேவியர் மற்றும் என்னுடைய ஆசான்கள், குருக்கள், மன்ற உறுப்பினர்கள் மற்றும் எனக்கு உதவியாக இருந்தார்கள் எனது சமூதாயமும் எனது வெற்றிக்கு ஒரு வகையில் வழிவகுத்தது. எனலாம்.

**கேள்வி** :- உங்களுடைய வளர்ச்சிக்கு எங்களுடைய சமுதாயம் எவ்வாறு உதவியாய் இருந்தது.
**பதில்** :- எமது ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பு தருவது மூலம் எமது சமூதாயம் எங்களுக்கு ஊக்கத்தை வளங்குகிறது அது மட்டுமல்லாமல் குருநகர் ஐக்கிய முன்னணி சார்பாக நாங்கள் வெளிநாடு சென்றபோது எனக்கு வளங்கப்பட்ட விருது நாங்கள் அரங்கேற்றம் செய்தமைக்காக வளங்கப்பட்டவை இதைநான் மிக சிறந்ததாக கருதகின்றேன் இது எமது ஊரால் தரப்பட்ட ஒரு அங்கிகாரமாகவும் நான் கருதுகிறேன். "ஒரு கலைஞன் கலை ஞனாக இருக்கும் போதெ வாழ்த்தவேண்டும் என்ற கூற்று நிறைவேறியதை நான் உணருகிறேன் இது போன்று என்னுடைய வளர்ச்சியில் நமது சமூகத்தின் உதவி கலந்திருக்கிறது.

**கேள்வி** :- குருநகர் சமூகத்திற்கு நீங்கள் என்ன செய்ய விரும்புகின்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்** :- தற்போது இந்தக்கலையை நான் மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றேன் இதன் மூலம் நான் முதல் கூறியது போன்று கல்வி வளர மன ஒரு நிலைப்பாட்டிற்கு இது வழி வகுக்கிறது இதனால் அவர்களின் கல்வி வளத்தையும் கலை வளத்தையும் பெற நான் உதவுவென் அது மட்டும் அல்ல இக்கலை சமூக ஒருமைப்பாட்டுக்கும் வழிவகுக்கிறது இதனால் இக்கலையை எமது குருநகர் மக்களுக்கு கற்பித்து உறவுகள் மேன்மையடைய எம் மக்களுக்கு இக்கலை இலகுவாக சென்றடைய நான் பங்களிப்பு வழங்குவேன்.

**கேள்வி** :- முன்னைய காலங்களில் மேடைகளில் பெண்கள் ஆடுவதை இழிவாக பார்த்த நிலை இருந்து வந்தது? இப்போதும் அதைப்பற்றி மக்கள் கருத்து எப்படி இருக்கிறது.
பதில் :- முன்பு இந்த நிலை இருந்து வந்தது பெண்கள் மேடைகளில் ஆடுவதில்லை பெண்களின் வேடங்களை ஆண்கள் தான் அணிந்து நடனம், நாடகம், கூத்து போன்றவை நிகழ்த்தியதாக நானும் அறிவேன் ஆனால் தற்போது இந்நிலை மக்களிடத்தில் மாறிவிட்டது 21ஆம் நூற்றாண்டில் பெண்களுக்கு சம உரிமை வளங்கப்படுகிறது. பரதக்கலையை ஒரு ஆன்மீக நோக்கோடும் கலைக்கண்ணோடும் பார்க்க வேண்டும் இவ்வாறான பார்வையில் பார்ப்பதன் மூலம் மக்களின் மனதில் ஒரு நிறைவையும் ஒரு ஆண்மீகத் தன்மையையும் அடைய வழி வகுக்கிறது இக்கலை.

**கேள்வி** :- உங்களைப் போல் நாட்டிய தாரகைகளை உருவாக்க நீங்கள் விரும்புகின்றீர்களா? அதற்காக நீங்கள் செய்த முயற்சிகள் என்ன?
**பதில்** :- நிச்சயமாக என்போன்று எனது ஊரில் நாட்டிய தாரகைகளை உருவாக்க நான் ஆவலாய் உள்ளேன் அதற்கான முயற்சி என்றால் தற்போது என்னிடம் 30, மாணவர்கள் பயின்று வருகின்றனர் இதை தவிர பாடசாலையில் இருந்தும் தனிப்பட்ட ரீதியிலும் என்னிடம் இவ் நடனத்தை பயிலுகின்றார்கள் இதற்காக நான் செய்யும் முயற்சிகளாக நான் பெற்ற பயிற்சிகளில் அவர்களையும் ஈடுபடுத்துகின்றேன் வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் Gread Test களில் அவர்களையும் பங்கு பெற செய்வதற்கு அவர்களை தயார்ப்படுத்துகின்றேன். எமது ஊரில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் எமது சிறார்களையும் மாணவர்களையும் தயார்ப்படுத்தி அவர்களின் திறமைகளை வெளிகொணர வழிவகுக்கின்றேன் அதுமட்டுமல்ல என்னிடம் உள்ள நடனயுத்திகளையும் அவர்களுக்கு கற்றுக்கொடுகக்கின்றேன்.

**கேள்வி** :- எமது பங்கிற்கு நீங்கள் செய்யும் பணிகள் பற்றி கூற முடியுமா?
**பதில்** :- எமது கோவில் சார்ந்த குருக்கள் சபைகள் ஆகியவற்றில் நான் கலந்து கொள்ளவில்லை ஆனால் ஒளிவிழா காலங்களில் ஒளிவிழா நிகழ்ச்சியில் மாணவர்களை, சிறார்களையும் தகுந்த விதத்தில் பங்குபெற செய்வதற்கு அவர்களை தயார்ப்படுத்தும் பணியை செய்து வருகின்றேன். எனது சிறுவயதில் எனது பங்கு சார்ந்த கலை நிகழ்சச்சிகளில் நானும் பங்கு பற்றியள்ளேன்.

**கேள்வி** :- உங்களுடைய வளர்ச்சிக்கு சவாலாக இருந்த காரணிகளை? கூறமுடியுமா?
**பதில்** :- மக்கியமாக எனது வளர்ச்சிக்கு தடையாக இருந்த காரணியாக போரையும் இடம் பெயர்வுகளும் காரணியாக அமைகின்றது இவ்இடப் பெயர்வினால் எனது பரீட்சையை நான் ஒரு வருடம் கழித்தே எடுக்க வேண்டியிருந்தது அத்துடன் எமது சமூகத்தில் நல்ல நோக்குடன் சில உலக நிகழ்வுகளை கலையின் ஊடாக கொடுக்கின்றபோது சில புரிந்து கொள்ளாதவர்கள் குழப்பங்கள் செய்வதனால் நாம் கொடுக்க வந்த செய்தி மக்களுக்கு முழுமையாக போய் சென்றடைவதில்லை இப்படியான சந்தர்ப்பங்கள் எங்களின் பாதையில் சில சில முட்களாக அமைந்தது என்று சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி :- உங்கள் கலை சார்ந்த அனுபவத்தில் மிகவும் பூரிப்பில் ஆழ்த்திய நிகழ்வுகள் ஏதாவது உண்டா?
பதில் :- கனடாவில் நடந்த ஒரு தமிழ் நிகழ்ச்சியின் முடிவில் எங்களுக்கு தரப்பட்ட விருதின்போதும் எங்களுக்கு கிடைத்த பாராட்டின் போதும் மிகவும் நாங்கள் மகிழ்ச்சியின் எல்லையில் இருந்ததை உணரமுடிந்தது குருநகர் கலையரங்கில் நாங்கள் வெளிநாட்டில் இருக்கும்போது எங்களின் அரங்கேற்றை நிறைவு செய்தமைக்காக எங்களுக்கு ஒரு பாராட்டு விழா நிகழ்த்தினர் அதில் எங்களின் பெற்றோரையும் அழைப்பித்து அவர்களை கௌரவித்தனர் இதனால் அவர்கள் எங்களுக்கு கொடுத்த ஊக்கங்கள் பயன் அடைந்ததை நினைத்து மகிழ்ந்தனர் இதை அறிந்து நாங்களும் பேரானந்தம் அடைந்தோம் மேலும் வத்திக்கான் நகரில் 2ஆம் அருள்ப்பர், சின்னப்பர் (John Poll) அவர்களை சந்தித்து ஆசிர்பெற்றதும் எங்களிற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

கேள்வி :- எமது மக்களிற்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?
பதில் :- இக் கலையில் ஈடுபாடு உள்ளவர்கள் பெரியவர் ஆயினும் சிறியவர் ஆயினும் ஆவலுடன் பயிலலாம் இதன் மூலம் தங்களது திறமைகளும் ஆன்மீகமும் சமூக இயல்பாக்கத் தன்மையும் வளர்கின்றது கலையை அறிந்திருப்பவர்கள் மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கும் தியாக மனப்பாங்கை வளர்த்து எம் சமூகத்தில் இக்கலை சிறப்புற்று விளங்க வழிவகுக்கவேண்டும் "யான்பெற்ற இன்பம் இவ்வையாகமும் பெறுக" என்பதற்கிணங்க செயற்பட வேண்டும் கலையை பிறருக்கு அளிப்பதன் மூலம் வளருமே தவிர குறைத்து செல்வமாய் விளங்கும்.

## 2

கேள்வி :- உங்களுடைய முழுப்பெயர் என்ன சொந்த ஊர் எது
பதில் :- தர்மினி எட்வெட் பிறேமகுமாரன் எனது ஊர் குருநகர் யாழ்ப்பாணம்

கேள்வி :- நீங்கள் படித்த பாடசாலை
பதில் :- யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

கேள்வி :- உங்களுடைய தற்போதைய கல்வி நிலை பற்றி கூறமுடியுமா?
பதில் :- யாழ்/இராமநாதன் நுண்கலை கழக 1ஆம் வருடமாணவி

கேள்வி :- இவ் வளர்ச்சிக்கு பெற்றோரின் பங்கு எப்படி இருந்தது?
பதில் :- இவ் நாட்டிய கலை கற்பதற்கு பின்னனியாய் இருந்தது எனது பெற்றோர்களே எனக்கு இக்கலையில் ஆக்கமும் ஊக்கமும் தந்தது பெற்றோர்களே

கேள்வி :- உலகில் பல கலைகள் இருந்தும் நீங்கள் நாட்டியக்கலையை தெரிந்து கொண்டதற்கான காரணம்?
பதில் :- எனது பெற்றோருக்கு இவ் நாட்டியகலையில் விருப்பமிருந்ததால் அவர்களின் விருப்பப்படி நாட்டியகலையை கற்றுக்கொண்டேன் அதை தொடர்ந்தும் வளர்த்த பின் நாட்டிய கலையில் இருந்த தனி ஈடுபாடு மூலம் தொடர்ந்தும் இக்கலையை கற்க வழிகளை மேற்கொண்டேன்

கேள்வி :- இக் கலைகளை கற்பதற்கு குருக்களாக இருந்தவர்கள் பற்றிக் கூறமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்** :- 6 வயதில் திருமறைக் கலாமன்றத்தில் எனது நாட்டியக் கலையை ஆரம்பித்தேன் இங்கு எனது 1வது குருவாக நளாயினி இராசதுரையிடமும் தற்போது ஆனந்தஜோதி தர்ஷனன் எனது குருவாக இருக்கின்றார் இடம் பெயர்வு காரணமாக மொத்தமாக 5 குருக்களிடம் இக் கலையை கற்றுள்ளேன் குருக்களின் பெயர்கள் நளாயினி இராசதுரை, கமலராணி, அகல்யா சுந்தரம், இப்போது அனந்த ஜோதி தர்ஷனன்.

**கேள்வி** :- இப்போர் சூழலில் உங்களுக்கும் கலைக்கும் இடையே உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கும் என நினைக்கின்றேன் அப்போது உங்கள் கலை முயற்சிகள் எப்படி இருந்தது.

**பதில்** :- 1995ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சென்றபோது எமது கல்வி முற்று முழுதாக பாதிக்கப்பட்டது அப்போத எனது பெற்றோர் எனது கலைகளையும் கல்வியையும் இடைநிறுத்தாது வவுனியா Convent இல் என்னை சேர்த்து அங்கு இக்கலை கற்று வந்தேன்.

**கேள்வி** :- இக்கலை உங்கள் கல்விக்கு துணையாக இருந்ததா இடையூறாக இருந்ததா?

**பதில்** :- இவ் நடனக்கலை தான் கல்வியை கற்க துணையாக இருந்தது கல்வியே நடனக்கலையை தொடர்ந்து கற்பதற்கு கல்வி தேவை என்பதாலேயே நான் கல்வியை மிக ஆர்வத்துடன் கற்க முயற்சி செய்தேன் தனிப்பட்ட ரீதியில் எனது குழப்பமான சோகமான நிலைகளில் எனது ஒரு சில அபிநயங்களை நினைக்கும் போது அமைதி கிடைப்பதை என்னால் உணர கூடியதாக இருக்கின்றது எப்போதும் நடனக்கலை கல்வியை பாதிக்கும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை எனது வாழ்வில் கல்விக்கு பக்கபலமாக இருந்தது இக்கலையே.

**கேள்வி** :- உங்கள் திறமையை வெளிக்கொணர கிடைத்த களங்கள் பற்றி கூறமுடியுமா?

**பதில்** :- நான் சிறுவயதில் பாடசாலையில் நிறைய கலைநிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன் அதை விட எனது முழுத்திறைமைகளையும் வெளிக்கொணர திருமறைக் கலாமன்றத்தினரால் எமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் அமைத்து தரப்பட்ட நிகழ்வுகளில் பங்கு பற்றியுள்ளேன்.

**கேள்வி** :- கலைகள் சார்பாக பெற்ற விருதுகள் பற்றி கூறுங்கள்

**பதில்** :- விருது என்ற முறையில் வளங்கப்பட்டது கனடா திருமறைக் கலாமன்றத்தின் சார்பாக எனக்கு ஒரு விருது வழங்கப்பட்டது இது தவிர வேறு பாடசாலைகளிலும் மற்றும் திருமறைக் கலாமன்றம் சார்பாகவும் நாங்கள் பங்குகொண்ட நிகழ்ச்சிகளிலும் மற்றும் வெளிநாடுகளிலும் எங்களுக்கு சான்றிதழ்கள் பல வழங்கப்பட்டது.

**கேள்வி** :- உங்கள் கலைப்பயணங்கள் பற்றி கூறக.

**பதில்** :- கூடுதலாக நான் திருமறைக் கலாமன்றத்தின் ஊடாகத்தான் கலைப் பயணங்களை மேற்கொண்டுள்ளேன். முதலில் நான் சென்றது "தமிழ் விழா" தொம்மித்தை, தந்தனம், "புதுயுகம் நோக்கி" என்ற தலைப்பில் பல நகரங்களிலும் ஏன் பல நாடுகளிலும் எங்கள் கலை நிகழ்வுகளை நடாத்தினோம் இறுதியாக இப் பயணங்கள் சமாதானத்தை மையமாக கொண்டே அமைந்தது.

**கேள்வி** :- வெளி நாடுகளில் உங்க்ள் அனுபவம் பற்றி கூற முடியுமா?

**பதில்** :- வெளிநாடு என்றால் தான் முதலில் சென்றது சுவிஸ் 2001ஆம் ஆண்டு லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ் அகிய ஐரோப்பிய நாடுகளில் எனது பயணத்தை மேற்கொண்டேன் பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ஆம் ஆண்டு இத்தாலி, கனடா, ஆகிய நாடுகளுக்கும் சென்றோம் கனடா ஜோக் பல்கலைக் கழகத்தில் கிடைத்த பாராட்டு என்னை பூரிப்பிற்குள்ளாக்கியது அதைவிட வாழ்க்கையில் மறக்க முடியாததாக 2004ஆம் ஆண்டு வத்திகானில் 2ஆம் அருளப்பர், சின்னப்பர் சந்தித்து ஆசீர் பெற்றது எனக்கு மிகவும் பேரானந்தத்தை ஏற்படுத்தியது.

**கேள்வி** :- உங்களின் கலை வளர்ச்சிக்கு வித்திட்டது திருமறைக் கலாமன்றம் என்ற கூறினீர்கள் தற்போது திருமறைக் கலாமன்றத்திற்கும் உங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கூறமுடியுமா?

**பதில்** :- இப்பநான் திருமறைக் கலாமன்றத்தில் மாணவி மட்டுமன்றி அதில் ஒரு உறுப்பினரும் திருமறைக் கலாமன்றத்திற்கு என்னால் கலையில் நிலைத்திருக்கும் காலம் வரை என்னுடைய திறமைகளை அதற்கு வழங்க விரும்புகின்றேன்.

**கேள்வி** :- உங்களிடம் இக் கலையை பயிலும் மாணவர்களை எந்த விததத்தில் ஆயத்தம் செய்கிறீர்கள்?

**பதில்** :- பரதம் மட்டும் விரும்பும் மாணவர்கள் மிகக்குறைவு இப்போது அவர்கள் இக்கால நிலைக்கேற்ப அவர்கள் ரசனை கொஞ்சம் மாறுபடுகிறது எனக்கு இக்கலை வளரவேண்டும் என்பதில் சரியான அக்கறை அதன் பொருட்டு என்னிடம் இக்கலை பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற முறையில் அவர்களின் ரசணைகேற்றவாறு பரதக்கலை நுட்பமும் நயமும் மாறாத விதத்திலும் அவர்களுக்கு இக்கலை எளிதில் சென்றடைய அவர்களுக்கான பயிற்சிகளையும் ஆயத்தங்களையும் செய்கின்றேன்.

**கேள்வி** :- உங்கள் வளர்ச்சியில் சமூகத்தின் பங்கு என்ன?

**பதில்** :- நான் பல நிகழ்வுகளை மேற்கொள்ள சமூகம் பல சந்தர்ப்பங்களை அமைத்துதந்தது என்னுடைய கலை ஆர்வத்தையும் வளர்ச்சியையும் பாராட்டி பக்கபலமாக இருக்கின்றது குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அரங்கேற்ற நிறைவை முன்னிட்டு என்னையும் எனது பெறறோரையும் கௌரவித்தது இது எமக்கு மிக மகிழ்ச்சியைக் கொடுத்தது எனது கல்வியில் சித்திகள் பெற்றதன் பொருட்டு எமது சமூக நிறுவனங்கள் பாராட்டுகளையும் பரிசில்களையும் வளங்கி கௌரவித்தது இப்படி சமூகம் என் வளர்ச்சியில் பங்கு வகித்தது.

**கேள்வி** :- உங்கள் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தவர் யார்?

**பதில்** :- என்னுடைய வெற்றிக்கு காரணகர்த்தாவாக தனி ஒரு நபரை கூற முடியாது என்னையும் எனது கலையையும் ஊக்கவித்தது பெற்றோர் நான் சோர்வடையும்போது எனக்கு ஆறுதலாகவும் உந்து சக்தியாகவும் இருந்ததுடன் பொருளாதார ரீதியிலும் என்னை தட்டிக் கொடுத்தவர்கள் பெற்றோரின் சகோதரர்கள் இது மட்டுமன்றி திருமறைக் கலாமன்றமும் எமது சமூகமும் கூட எனது வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார்கள்.

**கேள்வி** :- எமது சமூகத்திற்கு என்ன செய்ய விரும்புகின்றீங்கள் என்னசெல்ல விரும்புகின்றீர்கள்.

**பதில்** :- என்னை போன்று கலைத்திறனுடன் நிறைய மாணவர்களை உருவாக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பமும் அவாவும் கூட எமது சமூகம் நாட்டிய கலையின் மேன்மையை உணர்ந்து தமது பிள்ளைகளை ஈடுபடுத்த விரும்பும் அனைவருக்கும் என்னால் முடிந்தவரையும் உதவி செய்வேன் அதுமட்டுமன்றி தற்போது என்னிடம் மாணவர்கள் இக்கலையை பயின்று வருகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை ஒருவனை ஆன்மீக வாழ்விற்கு இட்டுச் செல்லும் அந்த வகையை மாணவர்கள் இக்கலையை கற்று இக்கலை மூலம் ஆன்மீகத்தை அடைய வழிகோலுவேன். என்னைப் போன்று அவர்களையும் உருவாக்குவேன் இதன் மூலம் எமது சமூகத்தின் உயர்வுக்காக பாடுபடுவேன்.

நேர்காணல்

**சுதாகரன், டெனிஸ், கீஸைன்**

*சுமையில் இளையோர்*
*என்றாப் பெரும் செல்வம்*
*சேய்மையில் விளங்கும் செங்கோல் வீரம்*
*இளையோர் சேர்ந்தால் இடமே அதிரும்*
*அன்பே உருவாய் ஆதிக்கமும் கொண்டவன்*
*சாக்கடைச் சமூகமும் சார்ந்தமாய் மாறும்*
*இளையோர் கரங்கள் ஒன்று சேர்ந்தால்*

# 2006 ஆம் ஆண்டு அங்கத்தவர்கள்

ம. சுதர்சன் (தலைவர்)
கி. பார்த்தீபன் (செயலாளர்)
யே. சாள்ஸ்அன்ரனி (பொருளாளர்)
பி. றெக்ஸ்
ப. பிரியானந்தன்
க. றீகன்
கி. வினோத்
ஜே. தியோற்றிமஸ்
கெ. யோகேஸ்வரன்
அ. கென்சிங்டன்
இ. குணசேகர்
பெ. சதீஸ்குமார்
அ. வினூாசியஸ்
அ. சுஜீவன்
அ. யூட்லெயோன்
ச. தர்மராஜன்
ம. ராயு
கி. ஜென்சன்பிரபு
அ. நவயோகன்
தே. செல்ரன்
கு. திபாகரன்
இ. ஜெயப்பிரகாஸ்
கெ. ஒக்ஸ்மன்
ம. சுதாகரன்
பா. லூாக்டிமென்சன்
சி. டெனிஸ்
வி. றஜிந்தன்
ஆ. டொனால்கீசைன்
ஜ. ஜதீஸ்வரன்
சை. யுகேந்திரன்
கோ. செல்வன்
ம. நிருபன்

### மகிமை அங்கத்தவர்கள்

யே. இக்னேசியஸ் பிரபா
அ. யூஜின்ராஜ் (கனடா)
ம. ஜெயந்தகுமார் (லண்டன்)
இ. ஜெயந்திரன் (லண்டன்)
லெ. டயஸ்
யூ. சீசர்
ர. சதீஸ்
இ. சர்வலோகநாதன்
பி. றெஜினஸ்
யூட்
பி. அலோன்
ம. எமில்தாஸ்
ர. செபஸ்ரியான்
சே. சுவைனஸ்
கொ. பிரீஸ்ரன்
யே. செல்வநாயகம்
அ. டெவின்
நெ. கிட்லர்
கி. கைன்டோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றிகள்

குருநகர் யோசேவ் வாஸ் இளைஞர் மன்றத்தின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியினால் பிரசுரித்துள்ளோம்

இம் மலர் மலர, ஆசியுரை வளங்கிய யாழ் மறை மாவட்ட மேதகு ஆயர் அவர்களுக்கு எமது பங்கின் சார்பிலும் மன்றம் சார்பிலும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசியுரை வழங்கிய எமது ஆலய பங்குத் தந்தை உதவிப் பங்குத்தந்தை அவர்களுக்கு எமது மன்றத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் வாழ்த்துச் செய்தி வழங்கிய முன்னாள் மன்றத் தலைவர் அவர்களுக்கும், தலைவர் அவர்களுக்கும், தம் மன்றம் என்ற வகையில் தன்னிகரில்லா துணைதந்த மகிமை அங்கத்தவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

நிகரற்ற நெருக்கடியிலும் நிதிஉதவி தந்துதவிய அனைத்துள்ளங்களுக்கும், மலரின் இனிமைக்கு வலிமை சேர்க்க வலுவுள்ள ஆக்கங்களை வரிகளாய் வடித்துத்தந்த எம் மன்றத்தின் உறுப்பினர்களுக்கும்,

இம் மலர் வெளியீட்டுக்காக விளம்பரங்களைத் தந்துதவிய விளம்பரதாரர் அனைவருக்கும், இம் மலரினை குறுகிய காலத்தில் வடிவமைத்துத்தந்த ஜெயந்த் சென்ரர் உரிமையாளர் அவர்களுக்கும் மலர்ந்துள்ள மலருக்கு அட்டைப்படத்தினை வடிவமைத்துத் தந்த யூட்சன் அவர்களுக்கும் மற்றும் எம் மலர் உங்கள் கரங்களில் தவழ்ந்திட இலைமறை காய்களாய் கனிந்திட்ட அனைத்து இனிய உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத்தெரிவித்து நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

# கௌரி கபே

415, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.



10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

# விஜிதா கபே அன்ட் கூல்பார்

247, பிரதான வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

வீடியோ ஓடியோ சீடிகள் வாடகைக்கு விடப்படும் .
போட்டோ பிரதி தொலைத்தொடர்பு சேவைகளுடன்
*KIT* இனையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜக்ஸ்சன்

வீடியோ ஓடியோ சென்ரர்

கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

அவுட்மோட்டர் பழுதுபார்த்து திருத்திக் கொடுக்கப்படும்.
உதிரிப்பாகங்கள் யாவும் இங்கேயே
பெற்றுக்கொள்ளலாம்.

ஜஸ்ரின் அவுட்மோட்டர் திருத்துமிடம்

கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

# இரத்தினா ஸ்ரோர்

287, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.



10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

அனைத்து வகையான
இரத்தப்பரிசோதனைகள், சலப்பரிசோதனைகள்
உடனுக்குடன் செய்யப்படுகின்றன.

# RAKAVO HOSPITAL

கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

Dr. A. Rakavan
SLAMCE Rgd No.11614
G.P.S Road,
Kalviyankadu, Jaffna.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்

உலகெங்கும் இருந்து வரும் பணத்தை
WESTERN UNION மணி டிரான்ஸ்பர் முகவராகிய எம் ஊடாக
பெற்றுக்கொள்ளலாம்

ராஜன் வீசிஷஸ் கார்டன்

தொலைபேசி
0776-747 526
021-222 6854

17/10 கடற்கரை வீதி,
குருநகர்
யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

நவீன வடிவமைப்புக்களில்
அழகிய தங்க நகைகளை
செய்துகொள்ள

யோப்பிரபா
நகைப் பூங்கா

9, தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

உங்கள் எண்ணம்போல்
அழகிய தங்க நகைகளை
செய்துகொள்ள

பிரபன்ஸ் ஜூவல்லஸ்

204, பாங்ஷால் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

பிரசாந் கடைச்சல் தொழிலகம்

26, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
ஆ. மதுரநாயகம்

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

மோட்டார் வாகனங்கள்
பழுதுபார்த்து திருத்திக்
கொடுக்கப்படும்.

றொசான்

மோட்டார் திருத்துமிடம்

372, பீச்றோட் ,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

யாழ் கொழும்பு வாகன சேவை
தொடர்புகளுக்கு...

மலர் மல்ரி சென்ரர்
Malar Multi Center

135, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

நியூ றொசானி
தையல் நிலையம்

308, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

மோகன்
பல்பொருள் நிலையம்

பரிசுப் பொருட்கள்
பாவனைப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள்
விற்பனை நிலையம்

35, 4ம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகம்,
மற்றும் மின்சார உபகரணங்கள்,
பான்சிப் பொருட்களின்
விற்பனை நிலையம்.

ஆனந்தா
விற்பனை மாடம்

சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

சகல விதமான
பயிற்சிப் புத்தகங்கள்,
பயிற்சிக் கொப்பிகள்,
எழுது கருவிகள்,
வர்ணப்பெட்டிகள்
என்பன பெற்றுக் கொள்ளலாம்.

கவி புத்தகசாலை

(புனித யாகப்பர் ஆலயத்திற்கு முன்பாக)
குருநகர், யாழ்ப்பாணம்

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

புதிய
லக்ஷ்மன் கபே

கடற்கரை வீதி
குருநகர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

மின்சாரப் பொருட்கள்,
அன்ரனாப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
**kit card** என்பன
பெற்றுக் கொள்ளலாம்

**மரியஸ்லரன்**

**எலக்ரிக்கல்ஸ்**

*102, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

**NOEL REST HOUSE**

27, Main Street,
Jaffna.

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

கட்டடப் பொருட்கள்.
பெயின்ற் வகைகள்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**கதிசன் ஹாட்வெயார்**

*184,பாங்சால் வீதி,*
*சின்னக்கடை,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. 0776 147 376*

ஜோசேவ்வாஸ் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

**ஜெயரூபன் ஸ்ரோர்ஸ்**

எஸ். சோமசுந்தரம்
15, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்
ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு எமது வாழ்த்துக்கள்
கட்டடப் பொருட்கள், தளபாட உபகர்ணங்கள், எஸ்லோன்,
ரீ.வி.சி குழாய்கள், உதிரிப்பாகங்கள்,
கெவில்ரன் மின் சாதனப் பொருட்கள்,
ஏ.சி.எல் கேபிள் வகைகள் மின்குமிழ்கள்,
சவர் வலைகள், சகலவிமான ஆணிவகைகளும்
பெற்றுக் கொள்ளப்படும்.

ஸ்ரீ துர்க்கா இரும்பகம்

*186, பாங்சால் வீதி*
*சின்னக்கடை,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

கட்டட வேலைகளுக்கான
அனைத்துப் பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
மலிவான விலையில்
பெற்றுக் கொள்ளளலாம்.

ராஜலக்ஷ்மி

கட்டிடப்பொருள் விற்பனையகம்.

*78, சின்னக்கடை வீதி,*
*சின்னக்கடை, யாழ்ப்பாணம்.*
*T.P – 4591607*

ஜோசேவ்வால் மன்றத்தினருக்கு
எமது வாழ்த்துக்கள்

அன்றாட வீட்டுத் தேவையான
பலசரக்குப்பொருட்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள..

கோபால் ரேடர்ஸ்

(புனித யாகப்பர் ஆலயத்திற்கு முன்பாக)
குருநகர், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பம் முதல் இன்றுவரை பதவி வகித்தவர்கள்...

**1998**

தலைவர் :- A. யூஜின்ராஜ்
செயலாளர் :- A. தனேந்திரன்
பொருளாளர் :- யூலிதயான்

**1999**

தலைவர் :- ப. பிரியானந்தன்
செயலாளர் :- பே. றொசாறின்
பொருளாளர் :- அ. தனேந்திரன்

**2000**

தலைவர் :- ப. பிரியானந்தன்
செயலாளர் :- பி. றெக்ஸ்
பொருளாளர் :- சென் செபஸ்ரியன்

**2001**

தலைவர்: - றொசாறின்
செயலாளர்: - பி. றெக்ஸ்
பொருளாளர் :- ம. சுதர்சன்

**2002**

தலைவர் :- பி. றெக்ஸ்
செயலாளர் :- யே. தியோற்றிமஸ்
பொருளாளர் :- அ. லிவிங்ஸ்ரன்

**2003 / 2004**

தலைவர் :- ம. சுதர்சன்
செயலாளர் :- கி. பார்த்தீபன்
பொருளாளர்: - செ. அமலதாஸ்

**2005**

தலைவர் :- ம. சுதர்சன்
செயலாளர் :- கி. பார்த்தீபன்
பொருளாளர் :- சாள்ஸ் அன்ரனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூ ஜெனிபர் வீடியோ அன் ஓடியோ



## திருமண கார் சேவை,
## K.Tv. இணைப்பு,
## Kit Card, Phone Cover,
## Sim, Hand Phone Sales

உரிமையாளர் : வி. கென்ஸ்மன்
136, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
0777 556 499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வணிகத் தளிர் மலர் வரவு என்றென்றும் சிறந்து விளங்க வாழ்த்துவோம்!

தரம் வாய்ந்த மூக்குக் கண்ணாடிகளை சாதாரண
விலையில் பெற நாடவேண்டிய ஒரே இடம்

# LAVANIA

பல் - மூக்கு - கண்ணாடி அகம்






**Specialists in Handling the latest Technology in Optical work**

Prop: Dr. Regi Soloman





லாவண்யா

**525, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,**
**யாழ் வீதி, நெல்லியடி.**

*It's better sight at the unbeatable price.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org